DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1423 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 14, 2023

# சரத் வீரசேகராவின் நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம்



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகராவின் மிக மோசமான இன மத துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. கடந்த 10ம் திகதி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அண்மையில் குருந்தூர் மலை சட்டவிரோத நீதிமன்ற உத்தரவை மீறிய கட்டுமானத்தை பார்வையிட முல்லைத்தீவு கௌரவ நீதிபதி களவிஜயம் மேற்கொண்டிருந்தார்.

அந்த வேளையில் இவ் வழக்குடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத கொழும்பு மாவட்ட எம்பியான சரத் வீரசேகர தனது குழுவினருடன் குருந்தூரில் பிரசன்னமாகி இருந்தார். வழக்குடன் தொடர்புபடாத வெளிநபர்கள் சம்பவ இடத்தில் கருத்துகளை தெரிவிப்பதை நீதிபதி தவிர்க்குமாறு கூறியிருந்தார். (உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

# இலங்கையின் வடக்கு கிழக்கில் மர்மம் விலகாத மனித புதைகுழிகள்



இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்திற்கு எதிரான போர் குற்றமும் இலங்கை அரசாங்கத்தினால் போர் நெறி முறைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட யுத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின் வடுக்களும் மெல்ல மெல்ல திட்டமிட்ட அரச கட்டமைப்பினால் அழிக்கப்பட்டு வந்தாலும் அவ்வப்போது தோன்றும் மனித புதைகுழிகளும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களும், சர்வதேச அழுத்தங்களும், தமிழ் சமூகத்தின் எதிர்ப்புகளும் நாட்டில் இன்னமும் இன ரீதியான ,மத ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வு முன்னோக்கி கொண்டு செல்லப்பட வில்லை என்பதை எடுத்துக்காட்டு-கிறது.

(தொடர்ச்சி 3ம் பக்கத்தில் உள்ள கதிரோட்டத்தை பார்க்கவும்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI


சுவையான உணவுகளுடன் மார்க்கம் நகரில்
புதிய தென்னிந்திய உணவகம்.
KHAU GULLY
HOME FOR INDIAN FOOD SPECIALTIES
Now open at 39 Main St N, Markham (Hwy 7 & Main St)
Serving biriyanis, tandoori items, curries and brunch.
Patio and Party Hall available.
+1(289)379-8211
www.khaugully.ca
Come check our family run business and try the variety of food offered
at this newest Indian restaurant in Markham.


யூலை 27 அன்று வாக்களியுங்கள்
VOTE JULY 27
Andrea Hazell, Scarborough-Guildwood பகுதியில் வசிக்கும்
குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு
பாடுபடுவார்.
Libéral

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையின் வடக்கு கிழக்கில் மர்மம் விலகாத மனித புதைகுழிகள்

இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்திற்கு எதிரான போர் குற்றமும் இலங்கை அரசாங்கத்தினால் போர் நெறி முறைகளை மீறி மேற்கொள்ளப்பட்ட யுத்தமும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின் வடுக்களும் மெல்ல மெல்ல திட்டமிட்ட அரச கட்டமைப்பினால் அழிக்கப்பட்டு வந்தாலும் அவ்வப்போது தோன்றும் மனித புதைகுழிகளும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களும், சர்வதேச அழுத்தங்களும், தமிழ் சமூகத்தின் எதிர்ப்புகளும் நாட்டில் இன்னமும் இன ரீதியான ,மத ரீதியான பிரச்சினைகளுக்கான தீர்வு முன்னோக்கி கொண்டு செல்லப்பட வில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது.

பொறுப்புக்கூறல்,நல்லிணக்கம்,போர்குற்ற விசாரணைகள்,காணாமல் போனோர் தொடர்பான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக இலங்கை சமாளிப்புகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் கடந்த வாரம் முல்லைத்தீவு பகுதியில் பெண் போராளிகள் உட்பட பலர் கொன்று பைகளில் அடைத்து புதைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் புதைகுழி ஒன்று இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த பகுதி ஒன்றில் அடையாளம் காணப்பட்டுள்ளமை பல தரப்பட்ட கேள்விகளை எழுப்பியுள்ளது.

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது தமிழர் தாயக பகுதிகளில் சுமார் நாற்பதாயிரம் தொடக்கம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் இலங்கை ராணுவத்தின் பல்வேறு விதமான கொடூர தாக்குதலாலும், செல் வீச்சுக்களாலும் கொள்ளப்பட்டதாக இறுதி யுத்தத்தின் போது உயிர் பிழைத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.
அதே நேரம் இறுதி யுத்தத்திற்கு முன்பும், யுத்த நேரத்திலும், யுத்தம் நிறைவுற்ற பின்னரும் இலங்கையின் முப்படையினராலும், வெள்ளை வான்களின் மூலமாகவும், தமிழர் தாயகப் பகுதிகளில் இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாகவும் இன்னும் பலர் விசாரணை என்ற பெயரில் அழைத்து செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தாகவும் அதே நேரம் யுத்தம் நிறைவுற்ற சமயம் விடுதலை புலிகள் அமைப்பை சேர்ந்த போராளிகள் நூற்றுக்கணக்கானோர் பல்வேறு பகுதிகளில் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்த பின்னர் அவர்களும் காணாமல் ஆக்கப்பட்டதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை தேடும் சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சுமார் 15,000 பேர் வரையில் இலங்கையின் இராணுவம்,கடற்படை,அரசபுலனாய்வாளர்கள்,பொலிஸாரால் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

சர்வதேசத்திற்கு முன் தாங்கள் விசாரணைகளை திறம்பட செய்வதாக காண்பித்து வழக்கு விசாரணைகளை இழுத்தடிப்பது. வழக்குகளை இழுத்தடிப்பதாக வுமே பல புதைகுழி வழக்குகள் காணப்படுவதாக புதைகுழி வழக்குகளில் அரசாங்கம் தான் என்ன நினைக்கிறதோ அதையே செய்கிறது என காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சங்க மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவிக்கின்றார்.
மேலும் ராணுவம் இவ்வாறு தமிழர்களை கொன்று புதைத்த இடங்களையே இராணுவ முகாம்களாக்கி வைத்துள்ளதாகவும் அவ் காணிகளை விடுவித்தால் இவ்வாறு நூற்றுக்கணக்கான புதைகுழிகள் வெளிப்படலாம் என்ற அச்சத்திலேயே அவ் முகாம்களை ராணுவம் கைவிடாமல் இருப்பதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

குறிப்பாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த இப்பகுதியில் இதே போன்று உள்ள வேறு புதைகுழிகளும் கண்டுபிடிக்கபட்டு விடக்கூடாது என்பதற்காகவே மகாவலி வலயம்,பௌத்த விகாரைகள்,சிங்கள குடியேற்றங்களை அமைத்து புதைகுழிகளை மறைக்கின்றது என குற்றம் சுமத்துகிறார்.

கடந்த 2018 மன்னார் சதோச மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் வழக்கில் குற்றம் இழைத்தவர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் சந்தேக நபர்களை அடையாளப் படுத்தப்படவில்லை. மேலும் மிகுதி உள்ள எலும்புகளை அகழ்வதற்கான நடவடிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது
அதே நேரம் மன்னார் திருக்கேதீஸ்வரம் இராணுவ முகாமிற்கு அருகில் மீட்கப்பட்ட 141 அதிகமான எலும்புக்கூடுகளும் அவை கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான விசாரணையும் 10 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வருகின்ற போதிலும் மீட்கப்பட்ட எலும்புகள் இதுவரை பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.
இதே போன்று யாழ்ப்பாணம் மிருசுவில் புதைகுழி, செம்மணி புதைகுழி, மாத்தளை புதைகுழி என 20 க்கு மேற்பட்ட புதைகுழிகளில் இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்புக்கான ஆதாரங்கள் புதைக்கப்பட்டாலும் அவற்றை உறுதி செய்வதற்கான இழுத்தடிப்புக்கள் மூலம் தன்னை பாதுகாத்துக் கொள்கின்றது இந்த அரசாங்கம்.

நாட்டில் ஒரு நபர் வாழ்வதற்கான உரிமை இலங்கையில் மறுக்கப்பட்டு சர்வதேச யுத்த சட்டங்கள் மீறப்பட்டு ஜனநாயகம் புதைக்கப்பட்டதன் நேரடி சாட்சியமே இந்த புதைகுழிகள்.
இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இன்னும் கண்டு பிடிக்கப்படவுள்ள மனித புதைகுழிகள் இலங்கையில் தசாப்தங்கள் கடந்தும் இடம் பெறும் இன அழிப்பு மற்றும் ஜனநாயக கொலைகளின் சாட்சியங்களே. எப்போது இந்த புதைகுழிகளில் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன் னெடுக்கப்படுகின்றதோ எப்போது இந்த புதைகுழிகளில் கொடூரமாக கொள்ளப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கின்றதோ அன்று தான் இந்த நாடு சுதந்திர நாடு என்ற வழி நோக்கி நடக்கும் அது வரை மதவாத, இனவாத கொலையாளியாக இந்த நாடு காணப்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road. Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# கனடா — சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் ஒன்றுகூடல் – குரு அரவிந்தன்

சென்ற ஞாயிற்றுக் கிழமை 10-7-2023 சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் ஒன்று கூடல் ஸ்காபரோவில் உள்ள மோணிங்சைட் பூங்காவில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் மக்களின் நலன் கருதி 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஐக்கிய மன்றம் 21 வருடங்களை நிறைவு செய்திருக்கின்றது. தாயகத்திலும், கனடாவிலும் உள்ள சண்டிலிப்பாய் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு, அதற்கேற்ற அட்டவணைப்படி சேவை நலன் கொண்டு இயங்குகின்றது.

கனடாவில் வசிக்கும் சண்டிலிப்பாய் மக்கள் பிள்ளைகளுடன் குடும்பமாக வந்து ஒன்று கூடியிருந்தனர். பொதுவாக இப்படியான நிகழ்வுகளுக்கு இளந்தலைமுறையினர் வருவதைத் தவிர்ப்பதுண்டு. ஆனால் இங்கே பல இளந்தலைமுறையினரைக் காணக்கூடியதாக இருந்தது. காலை உணவு, மதிய உணவு, சிற்றுண்டி ஆகியன பரிமாறப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்தினரும் ஏதாவது ஒரு உணவை வீட்டிலே தயாரித்துக் கொண்டு வந்திருந்தனர். உறவுகளையும், நண்பர்களையும் சந்தித்து உரையாட முடிந்தது. வந்தவர்கள் எல்லோருக்கும் ஏற்ற வகையில் பலவிதமான விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்று பரிசுகளும் கொடுக்கப்பட்டன.

சங்கத்தினால் போர்க்காலத்திலும், அதன்பின் கோவிட்-19 காலத்திலும் ஊர் மக்களின் நன்மைகருதிச் சங்கத்தினால் பல மருத்துவப் பட்டறைகள் சண்டிலிப்பாயில் ஏற்படுத்தப்பட்டு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன. சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், தமிழ் கலவன் பாடசாலைக்கும் கல்வி சார்ந்த மேலதிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. கோவிட்காலத்தில் உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மானிப்பாய் அரசமருத்துவ மனைக்கு மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சண்டிலிப்பாய் அமைந்திருக்கின்றது. சண்டிலிப்பாய் பொதுவாக வயலும் வயல் சூழ்ந்த பகுதிகளையும் கொண்ட மருத நிலமாக இருக்கின்றது. வழுக்கை ஆறும், கூவல் என்று சொல்லப்படுகின்ற தெப்பக்குளமும், இங்குள்ள கோயில்களும் புராதன வரலாற்றைக் கொண்டவை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்பதற்கிணங்க, மிகப் பழமைவாய்ந்த பல வழிபாட்டுத் தலங்கள், குறிப்பாகக் கண்ணகி அம்மன் ஆலயம் போன்றவை இங்கேதான் இருக்கின்றன. வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல, கல்வி அறிவூட்டும் கல்விக் கோயில்களும் இங்கு இருக்கின்றன. இங்கே உள்ள கல்வளை பிள்ளையார் பற்றித்தான் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் ‘கல்வளை அந்தாதி’ பாடினார். அங்கணாக்கடவை கண்ணகி அம்மன் கோயிலும், மீனாட்சி அம்மன் கோயிலும் அருகருகே இருக்கின்றன. சீரணி அம்மன் கோயிலையும் சேர்த்தால் மூன்று அம்மன் கோயில்கள் சண்டிலிப்பாயில் உள்ளன.

**கொழும்பில் வீடு விற்பனைக்கு**

கொழும்பு-13 கொட்டாஞ்சேனையில் புளுமெண்டால் வீதியில் உள்ள வீட்டுத் தொகுதியில் 2ம் மாடியில் அமைந்துள்ள. ஒரு அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. அண்மையில் திருத்தியமைக்கப்பட்டது.
தொடர்புகளுக்கு 647 779 1712 என்னும் கனடா இலக்கத்தை அழைக்கவும்

**மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

ரொறன்ரோவிற்கு மிக அருகில் மருத்துவக் குணம் கொண்ட பத்தியக் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிஞ்சு கோழிகள் விற்பனைக்குண்டு. இவையனைத்தும் திறந்த வெளியில் வளர்க்கப் பட்டவை. இயற்கையான வளர்ப்பு கொண்டவை.
தொடர்புகளுக்கு (647)920-5180

**தெல்லிப்பளையில் காணிகள் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் இரண்டு வெவ்வேறு காணிகள் உடனடியாக விற்பனைக்கு உள்ளன.
ஒன்று 4 பரப்புவீடு கட்டக்கூடிய சதுரக் காணி.
மற்றையது மூன்றரைப் பரப்புக் காணி.
பழைய வீடு இடிந்த நிலையில் உள்ளது.
இரண்டு காணிகளும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளன.
மின்னிணைப்பு போன்றவை இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : இ.பி. முத்துத்தம்பி - கனடா- 905 554 3435

**வீடு விற்பனைக்கு**




யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியில் 4 பரப்பு காணி 7 படுக்கை அறைகளுக்கு 5 குளியலறைகளை கொண்ட அடுக்கு மாடி வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு பெறுமதி பேசி தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு :- 416-454-8936

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்

(9-07-2023)




வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக பற்றிக் டிரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் 10 ஆம் திகதி முதல் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த உமாமகேஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டத்தின் செயலாளராக நியமிக்கப்படவுள்ள நிலையில் இந்த வெற்றிடத்திற்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பற்றிக் டிரஞ்சன் முன்னதாக உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக கடமையாற்றிய மை குறிப்பிடத்தக்கது.

# புதிய சட்ட திருத்தம் தொடர்பில் சந்திக்க தயார் — அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



திருத்தப்படவுள்ள புதிய மீன் பிடி சட்டங்கள் தொடர்பில் மீனவ சங்கங்கள் கலந்துரையாட விரும்பினால் அமைச்சில் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என கடற்தொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

திங்கட்கிழமை யாழ் பாடி விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் எழுப்பிய கேள்வி ஒன்று தொடர்பில் அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் கடற்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் புதிய மீன்பிடிச் சட்டத்தால் வடக்கு மீனவர்களின் பிரச்சனை தீர்க்கப்படுமா என கேள்வி எழுப்பியதுடன் புதிய சட்டங்கள் தொடர்பில் சாதக பாதக தன்மைகள் தொடர்பில் முற்கூட்டியே அமைச்சருடன் கலந்துரையாட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது இலங்கையில் உள்ள 15 கடற் தொழில் மாவட்டங்களிலும் புதிய மீன்பிடிச் சட்டம் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன் போது புதிய சட்டத்தில் மீனவர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பில் வருகைதரும் அதிகாரிகளுடன் தெளிவாகக் கலந்துரையாடலாம்.

இல்லாவிட்டால் அமைச்சில் கலந்துரையாட விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறப்பாக இடம் பெற்ற மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழு ஏற்பாடு செய்த விளையாட்டு விழா

**- மன்னார் நிருபர் (10-07-2023)**



மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு விழா சனிக்கிழமை (8) மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மைதானத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.






குறித்த விளையாட்டு விழாவில் மன்னார் மறை மாவட்டத்தை சார்ந்த அனைத்து பங்கு இளை-யோர் இணைந்து நான்கு குழுக்களாக பிரித்து விளையாட்டுகள் சிறப்பாக இடம்பெற்றது.

குறித்த விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கேடயம் மற்றும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நாயகம் அடிகளார், மன்னார் மாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை ஏ. விக்டர் சோசை அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# இளவாலை பிரான்பற்றில் இளம் குடும்பஸ்தர் கத்தியால் குத்தி படுகொலை!

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரான்பற்று முருகன் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற கத்திக்குத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், நள்ளிரவு 12.30 மணியளவில் உறவினர்கள் மூவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இருவர் இணைந்து ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். இதன்போது அவர்மீது கத்திக் குத்தும் நடாத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பு - பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் ராஜ்குமார் (வயது 35) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து இருவரை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் மன்னாரில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கிய அரச அதிபர்

**- மன்னார் நிருபர் (10-07-2023)**



ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 4 பேருக்கு திங்கட்கிழமை (10) காலை மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டி மேல் குறித்த நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இதன் போது உதவி மாவட்டச் செயலாளர் உள்ளடங்கலாக மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டி மேல் கருத்து தெரிவிக்கையில், அரசாங்கத்தின் ஒரு லட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக நேர்முக தேர்வு நடத்தப்பட்டு மன்னார் மாவட்டத்தில் தகுதியான 234 பேரின் விவரங்கள் அனுப்பி வைத்திருந்தோம்.

இவர்களில் 42 பேர் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த 42 பேரில் இறுதியாக 45 வயதுக்கு கீழ்பட்ட 4 பேரும், 45 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் உள்ளடங்கலாக 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் 2 சாரதிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரின் விபரங்களும் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்றுக் கொள்ளும் உங்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு காணப்பட்ட போதும் குறைந்த சம்பளத்தில் உங்கள் பணியை முன்னெடுத்து இருந்தீர்கள்.

தொடர்ந்து சவால்களுக்கு முகம் கொடுத்து பணியாற்றி வந்தமையினால் உங்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

தற்போது நீங்கள் அரச பணிக்குள் இணைந்துள்ளீர்கள். மக்கள் சேவையை மனதில் நிறுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை முன்னெடுக்க வேண்டும்.என தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கில் பல இலட்சம் பெறுமதியில் தனியாரால் ஆலயத்துக்கு அமைத்து கொடுக்கப்பட்ட வீதி



தனி ஒரு மனிதனால் பல இலட்சம் பெறுமதியில் தனியாரால் ஆலயம் மற்றும் கடற்கரைக்கு அமைத்து கொடுக்கப்பட்ட வீதி.

தனி ஒருவரால் ஆலயம் ஒன்றிற்கு செல்வதற்கும் கடற்கரைக்கு செல்வதற்கும் பல இலட்சம் பெறுமதியான வீதி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.





யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கிலிருந்து கடற்கரையில் உள்ள நாலாம் பனை பிள்ளையார் ஆலயத்திற்கு செல்கின்ற வீதி மற்றும் அங்கிருந்து கடற்கரைக்கு செல்கின்ற வீதி என்பனவே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு கிலோ மீட்டர் வரையான வீதியே இவ்வாறு ரூபா 35 இலட்சம் நிதியில் புனரமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

அவரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கடற்கரைக்கு செல்லும் வீதி சுமார் 600 மீற்றர் நீளம் கொண்டது. இதில் சுமார் முந்நூறு மீற்றர் வரை 5 அடி வரை உயரமாக மண் அரண் அமைக்கப்பட்டு அதற்கு மேலாக கிரவல் இடப்பட்டே இந்த வீதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கடற்கரை வீதியில் நூறு வரையான சவுக்கு, இலுப்பை போன்ற மரங்கள் நாட்டி அதற்கு நீர் இறைத்தும் வளர்த்தும் வருகிறார்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச சபையால் பொருத்தப்பட்டு சில நாட்களிலேயே செயலிழந்து போன வீதி விளக்குகளையும் அவர் சீர் செய்து கொடுத்துள்ளதுடன் 17 வீதி விளக்குகளை புதிதாக பொருத்தியும் கொடுத்துள்ளதுடன் நீண்ட தூரம் நடந்து பாடசாலைக்கு செல்கின்ற பல மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், உதிரி பாகங்கள், என்பனவும் வழங்கி கல்வி ஊக்கிவிப்பு பணிகளையும் மேற்கொண்டு வருவதுடன் பல்வேறு ஆன்மீக பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்.

இவரை மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர். ஆனால் அவர் தனது பெயரையோ தன்னைப்பற்றியோ ஊடகங்களுக்கு தெரிவிப்பதை தவிர்து வருகின்றமை குறிப்பிட தக்கது.

# யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிறுவனத்தில் மனித உரிமைகள் டிப்ளோமோ கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.





சட்டத்துக்கு மனித உரிமைக்குமான நிறுவனத்தின் இயக்குனர் அம்பிகா ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளா தேவி கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் தங்கவேலு கனகராஜ், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் றுக்கி பேர்ணன்டோ மற்றும் அருட்தந்தை ரொனால்ட் சுஜீவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# முல்லைத்தீவில் வீடொன்றில் சிலர் நுழைந்து துப்பாக்கிச் சூடு – 23 வயதுடைய இளைஞன் பலி



- மன்னார் நிருபர் (10-07-2023)

முல்லைத்தீவு - மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலிநகர் பகுதியில் உள்ள வீடொன்றில் 10-07-2023 சிலர் நுழைந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மட்டக்களப்பு நோக்கி பயணித்த பேருந்து ஆற்றில் விழுந்து விபத்து! 10 பேர் பலி! 40 பேர் காயம்!

(10-07-2023)

மன்னம்பிட்டி - கொத்தலிய பாலத்தில் இருந்து பேருந்து ஒன்று ஆற்றில் வீழ்ந்ததில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதுரு வலையிலிருந்து இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த பேருந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை (09) இரவு 8 மணி அளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த 40 பேர் மன்னம்பிட்டிய மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்



# யாழ்ப்பாணம் நவாலி சென் பீற்றர்ஸ் படுகொலை நினைவேந்தல்



யாழ்ப்பாணம் - நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய படுகொலை நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 28 ஆம் ஆண்டு நினைவு தினம் ஞாயிற்றுக்கிழமை (09.07.2023) சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகினர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் (Leap forward) எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.



தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றையதினம் காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

# வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டால், "இன்னும் பல புதைகுழிகள் வெளிப்படும்"

(10-07-2023)

வடமாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றினால் மேலும் பல புதைகுழிகளை கண்டுபிடிக்க முடியும் என காணாமல் போன தனது மகனைத் தேடி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மன்னாரில் உள்ள தமிழ் தாய் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"இப்பொழுது ஒவ்வொரு புதைகுழிகளாக கிளம்பிக் கொண்டிருக்கின்றன. அதுபோல் முல்லைத்தீவில் ஒரு புதைகுழி கிளம்பியுள்ளது. இராணுவ முகாம்களை அகற்றினால் இன்னும் பல புதைகுழிகள் வெளிவரும். ஏனென்றால் இராணுவ முகாம்களில் இருக்கின்ற இடங்களில் புதைகுழிகள் இருக்கும். பிடித்துக் கொண்டு போன பிள்ளைகளை அவர்களே அடித்துக் கொண்டிருப்பார்கள். அந்தந்த இடத்தில் புதைக்கப்பட்டுள்ளமையால், இராணுவ முகாம்களை அகற்றாமைக்கு காரணம் என்னவென்றால் தம்முடைய சிங்கள மக்களை கொண்டு வந்து குடியேற்றுவதற்கும், பௌத்த விகாரைகளை அங்கு அமைப்பதற்கு காரணம் புதைகுழிகளை மூடி மறைத்து தங்களது மக்களை கொண்டு வந்து பாதுகாப்பதற்காகவே."

2008ஆம் ஆண்டு பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தனது 24 வயது மகனைக் கண்டுபிடிக்கக் கோரி போராடி வரும் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவர் மனுவேல் உதயச்சந்திர, ஜூலை 7ஆம் திகதி மன்னார் பசார் பகுதியில் நடைபெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரும் போராட்டத்தில் கலந்துகொண்டார்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை மீளப்பெற வேண்டுமென போராட்டத்தின் போது மனுவேல் உதயசந்திராவ வலியுறுத்தியுள்ளார்.

"எங்களுடைய தமிழ் பிரதேசத்தில் பௌத்த விகாரைகள் ஒன்றும் அவசியமில்லை. அவர்கள் யாரும் இங்கு இல்லை. தமிழ் பிரதேசத்தில் அவர்களை ஏன் கொண்டுவந்து வைக்க வேண்டும். சிங்கள இராணுவத்தை வெளியில் எடுங்கள் என்றுதான் நாம் கோருகின்றோம். எடுத்தால்தானே எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும்."

ஜனாதிபதி ஊடக மத்திய நிலையம் கடந்த ஜூலை 6ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், "அரசாங்கம் யாரையும் மகிழ்விப்பதற்காக இராணுவத் தளங்களை ஒருபோதும் அகற்றாது. ஆனால் உரிய விசாரணைக்கு பின்னர் இறுதி தீர்மானம் மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது." எனக் குறிப்பிட்டார்.

"வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், வெள்ளை வேனில் கொண்டு சென்ற பிள்ளைகள் எங்கே?, OMP'யும் வேண்டாம் 2 இலட்சமும் வேண்டாம், சரணடைந்த உறவுகள் எங்கே? போன்ற கோசங்களை எழுப்பியவாறு, மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்கள் இணைந்து மன்னார் பசார் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியதோடு, ஐக்கிய நாடுகள் சபை தமது பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வை வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

"எங்களுக்கு தீர்வு ஒன்று கிடைக்கும் வரை போராடிக்கொண்டிருப்போம். இறுதியாக ஒன்றை கூறுகின்றோம் ஐக்கிய நாடுகள் சபையாவது எமக்கு ஒரு நல்லத் தீர்வை பெற்றுத்தர வேண்டும்." என மனுவல் உதயச்சந்திர குறிப்பிட்டார்.

அரச படையினரால் காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி வழங்கத் தவறியதோடு நட்டஈடு பற்றி மாத்திரம் பேசும் காணாமல் போனோர் அலுவலகத்தை (OMP) அகற்றுமாறும் போராட்டத்தில் ஈடுபட்ட மன்னார் தமிழ்த் தாய்மார்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமரர் சிவசிதம்பரத்தின் 100 வது ஜெனன தினத்தை முன்னிட்டு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினால் மாட்டுவண்டி சவாரி போட்டி





அமரர் சிவ சிதம்பரத்தின் 100வது ஜெனன தினத்தை முன்னிட்டு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினால் 09/07/2023 பிற்பகல் 2:00 மணியளவில் சோனப்பு மாட்டுவண்டி சவாரி திடலில் மாட்டுவண்டி சவாரி போட்டி நடத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி அபிருத்தி ஒன்றியத்தின் தலைவர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அதன் போசகரும் யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கண்டிருந்தார்.

இன்றைய போட்டிகள் பல்வேறு பிரிவுகளாக போட்டிகள் நடாத்தப்பட்டு அதில் தெரிவு செய்யப்பட்ட முதல் மாட்டு வண்டிகளுக்கே பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் வட மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாட்டுவண்டிகள் போட்டியில் பங்குபற்றியிருந்தன.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கற்பிட்டி விபத்தில் இளைஞன் பலி!



(8-07-2023)

கற்பிட்டி, பள்ளிவாசல் துறை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை 7ம் திகதி இடம்பெற்ற வீதி விபத்து சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கற்பிட்டி திகழி, ஏத்தாளை யைச் சேர்ந்த சஹ்றாப்தீன் சல்மான் (வயது 25) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும், சிறிய ரக லொறியொன்றும் கற்பிட்டி பள்ளிவாசல்துறை கண்டல்குடா பாலத்திற்கு அருகே மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அங்கிருந்தவர்கள் குறித்த இளைஞனை சிகிச்சைக்காக கற்பிட்டி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் அங்கிருந்து புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எனினும், புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த குறித்த இளைஞன், கற்பிட்டி, குறிஞ்சிப்பிட்டியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் ரேஸ் போட்டியை பார்வையிட்ட பின் தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளார் என சொல்லப்படுகிறது.

உயிரிழந்த இளைஞனின் சடலம் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்கு தொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழி ஆய்வாராய்ச்சியானது, சாட்சியங்களை திரட்டுகின்ற பொறிமுறையின் அடிப்படையில் அதன் பிரதிநிதிகள் முன்பாக மேற்கொள்ளப்பட வேண்டும்

## ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரனது ஊடக அறிக்கை



கொக்கு தொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழி ஆய்வாராய்ச்சியானது, மனித உரிமை பேரவையில் இயற்றப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையிலே அதற்கான சாட்சியங்களை திரட்டுகின்ற பொறிமுறையின் அடிப்படையில் அதன் பிரதிநிதிகள் முன்பாக இந்த அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் 8ம் திகதி வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குதொடுவாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற புதைகுழிகள் அகழ்வு ஊடாக பல மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது கடந்த காலத்தில் குற்றச்சாட்டப்பட்ட வகையிலே யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ற பல விடயங்களிற்கு சாட்சியமாக விளங்குகின்றது.

மனித உரிமை பேரவையில், மனித உரிமை உயர்தானிகராலும் இந்த யுத்த குற்றங்கள், மனித உரிமை மீறல்களிற்கான சாட்சியங்களை பதிவு செய்கின்ற ஒரு பொறிமுறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த அகழ்வாராய்ச்சி என்பது மனித உரிமை உயர்தானிகர் அல்லது ஐ.நாவின் வதிவிடப்பிரதிநிதிகள் முன்பாகவும் இந்த சாட்சியங்களிற்கான அலுவலகம் திறக்கப்பட்டு இதற்கான உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பாரிய நிதி ஒதுக்கீட்டினையும் ஐ.நா செய்துள்ளது.

ஆகவே அவர்களையும் வைத்துக்கொண்டு இந்த அகழ்வாராச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலமே, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்தவர்களின் தோண்டியெடுக்கப்படும் மனித புதைகுழிகளின் விபரங்களை சரியான முறையில் பதிவு செய்ய முடியும்.

குறிப்பாக கொக்குத் தொடுவாய் என்பது தமிழ் மக்கள் பூர்விகமாக வாழ்ந்த இடம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடம் என்பது மட்டுமன்றி யுத்தத்திற்கு முன்னரே அங்குள்ள தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதும், கிராமங்கள் அழைக்கப்பட்டதும் என்று பல குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்த விடயங்களை சர்வதேச பிரதிநிதிகள் மாத்திரமன்றி குறிப்பாக ஐ.நாவினுடைய மனித உரிமை உயர்தானிகருடைய அல்லது மனித உரிமை பேரவையில் இயற்றப்பட்ட பிரேரணைகளின் அடிப்படையிலே அதற்கான சாட்சியங்களை திரட்டுகின்ற பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிநிதிகள் அல்லது அலுவலர்கள் முன்னாலே இந்த அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்தார்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கைச் செய்திகள் Sri Lanka News

# தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவியை தாக்கிய ஆசிரியர் – வலிகாம வலயத்தில் சம்பவம்

யாழ். வலிகாம வலயத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவி ஆசிரியரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவியின் கையில் ஆசிரியர் பலமாகத் தாக்கியதில் மாணவி கையைத் தூக்க முடியாமல் அவதிப் பட்டுள்ளார்.

மாணவியின் நிலையை அறிந்து கொண்ட பாடசாலை நிர்வாகம் மருந்தகம் ஒன்றில் நோவுக்குரிய மருந்துகளை வாங்கிப் பூசியுள்ளனர்.

இன் நிலையில் பாடசாலை விட்டதும் மாணவி வீடு சென்ற நிலையில் தனக்கு நடந்த சம்பவத்தை வீட்டாருக்கு தெரியப்படுத்தினார்.

இந்நிலையில் தமது மகள் கையை தூக்க முடியாமல் அவதிப்படும் நிலையை அறிந்த பெற்றோர் யாழ். போதனா வைத்தியசாலையில் மகளை அனுமதித்துள்ளனர்.

குறித்த விடையம் தொடர்பில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் தொடர்பு கொள்ள முடியவில்லை.

# யாழ். சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாது இன்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்






யாழ். சாவகச்சேரி நீதிமன்ற சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாது இன்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக இன்றைய வழக்கு விசாரணைகள் தவணையிடப்பட்டன.

தமிழ் நீதிபதிகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்த கருத்தை கண்டித்து இந்த பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# இன நல்லிணக்கம் இல்லாத மத நல்லிணக்கம் தமிழர்களுக்கு ஆபத்தானது என்கிறார் சபா குகதாஸ்

இன நல்லிணக்கம் ஏற்படாமல் முன் நகர்த்தப்படும் மத நல்லிணக்கம் என்ற பெயரில் கொண்டுவரப்படும் சட்டங்கள் தமிழர்களின் தொன்மைகள் மற்றும் மத அடையாளங்களுக்கு மிக ஆபத்தானவை என்பதை தமிழர் தரப்பு விளங்கிக் கொள்வது அவசியமானது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.


இன்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது, தமிழர்களின் வரலாற்றுத் தொன்மைகளை பௌத்த சிங்கள மயமாக்குவதற்கு சிங்கள கடும் போக்காளர்கள் கையில் எடுக்க இருக்கும் ஆயுதம் மத சுதந்திரத்திற்கு குந்தகம் விளைவிப்பதை தடுப்பதற்கான சட்டம்.

சட்டம் என்ற போர்வையில் ஜனநாயகப் போராட்டங்களையும் பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான எதிர்க் குரல்வளையையும் நிரந்தரமாக அடக்குவதற்கு சிங்கள பேரினவாத அரசாங்கம் தயாராகிறதா?

இன நல்லிணக்கம் இல்லாமல் கொண்டுவரப்படும் மத மற்றும் கலாசார சட்டங்கள் தமிழர்களின் இருப்பை கபளீகரம் செய்வதற்கு என்பதை தமிழர் தரப்பு மறந்து விடக்கூடாது.

தற்போது தாயகப்பகுதியில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழர் தரப்பினால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளை தடுப்பதே சட்டங்களின் உள் நோக்கம் அத்துடன் மத சுதந்திரம் என்ற பெயரில் தமிழரின் மத கலாசார அடையாளங்களை இல்லாது அழித்தல் ஆட்சியாளரின் பிரதான இலக்கு - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகராவின் இன மத துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம்




நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகராவின் மிக மோசமான இன மத துவேசத்துடனான நீதித்துறையை அச்சுறுத்தும் உரைக்கு அகில இலங்கை சைவ மகா சபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

கடந்த 10ம் திகதி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அண்மையில் குருந்தூர் மலை சட்டவிரோத நீதிமன்ற உத்தரவை மீறிய கட்டுமானத்தை பார்வையிட முல்லைத்தீவு கௌரவ நீதிபதி களவிஜயம் மேற்கொண்டிருந்தார்.

அந்த வேளையில் இவ் வழக்குடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத கொழும்பு மாவட்ட எம்பியான சரத் வீரசேகர தனது குழுவினருடன் குருந்தூரில் பிரசன்னமாகி இருந்தார்.

வழக்குடன் தொடர்புபடாத வெளிநபர்கள் சம்பவ இடத்தில் கருத்துகளை தெரிவிப்பதை நீதிபதி தவிர்க்குமாறு கூறியிருந்தார்.

இந்த நிலையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் தன் பேரினவாத அடக்குமுறை சித்தாந்தத்தை பிரதிபலித்து மிக மோசமாக நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் பாராளுமன்றத்தில் சரத் வீரசேகரா உரையாற்றி உள்ளார்.

தமிழ் நீதிபதி என விளித்து அச்சுறுத்தும் எச்சரிக்கை வசனங்களை குறிப்பிட்டமை மிக மோசமான இனவாதம் ஆகும். அது மட்டுமன்றி நீதிமன்றத்தின் உயரிய மாட்சிமைக்கு பங்கம் விளைக்கும் அதி தவறான முன்னுதாரணத்தையும் ஏற்படுத்த வழிகோலுகின்ற வகையில் அமைந்திருக்கின்றது.

மேலும் ஆதி காலம் தொட்டு தமிழர்களால் வழிபடப்பட்டு வந்த ஆதி சிவன் கோவிலின் திரிசூலம் பற்றியும் மிகத்தவறான கருத்துக்ளை பதிவு செய்துள்ளார்.

இங்கு ஆயிரம் வருடங்களிற்கு முன்னதாகவே மிகத் தொன்மையான ஆதி சிவன் கோவில் அமைந்திருந்தையும் மிகப் பெரிய ஆவுடையார் உள்ளிட்ட சிவலிங்க பாகங்கள் நந்தி போன்றன மீட்கப்பட்டு இருந்ததையும் மேனாட்டு தொல்லியல் அறிஞர்களான எச். பி.பெல், லூயிஸ் ஆகியோர் கடந்த நூற்றாண்டிலேயே அகழ்வாராய்ச்சிகளுடன் உறுதிப்படுத்தி இருந்தனர்.

இந்நிலையில் இன்றும் முற்றிலும் சைவத்தமிழர் வசிக்கும் இடத்தில் அவர்களின் வழிபாட்டுரிமைக்கு சவால் விடும் செயற்பாடுகளில் முல்லைத்தீவு குருந்தூர் மலையில் அடாவடியாக ஈடுபட முனையும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் வீரசேகராவிற்கு நீதிமன்ற உத்தரவுகள் விசனத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

அதன் வெளிப்பாடே நாடாளுமன்ற சிறப்புரிமையை துஸ்பிரயோகம் செய்து கௌரவ நீதிபதியை இனவாத நோக்கில் அவமதித்து அச்சுறுத்தும் வார்த்தை பிரயோகம் அடங்கிய அவரது உரையாகும்.

இன மத நல்லிணக்கத்தையும் உயரிய நீதிமன்ற மாண்பையும் காக்கும் வகையில் நாட்டின் சகல முற்போக்கு சக்திகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்டனங்களை பதிவு செய்ய வேண்டுவதுடன் கௌரவ சனாதிபதி சபாநாயகர் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் சைவத்தமிழ் மக்கள் சார்பாகவும் நீதிமன்ற மாண்பை மதிக்கும் நாட்டின் பிரசைகள் சார்பாகவும் வேண்டி நிற்கின்றோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

அகில இலங்கை சைவ மகா சபை

# கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் செயற்படுவோம் மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் செயற்படுவோம் மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு பாடசாலை முதல்வர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இன்று இடம்பெற்றது.

பிற்பகல் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. இரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







விருந்தினர் வரவேற்கப்பட்டதை அடுத்து தேசியக் கொடியேற்றப்பட்டது. தொடர்ந்து பாட-சாலைக் கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆரம்பக் கல்வி மாணவர்களின் அணி வகுப்பு நிகழ்வினைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன் போது, மாணவர்களிற்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன. நிகழ்வில் பெற்றோர், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கனடா இந்து

CANADA HINDU

Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648

## மகோற்சவ காலத்தில் துர்க்கேஸ்வரத்தில் சிறப்பு வழிபாடுகள்

### யூன் 27 செவ்வாய் முதல் யூலை 21 வெள்ளி வரை 25 தினங்கள்

துர்க்கேஸ்வரம் திருக்கோவில் மகோற்சவம் ஆடிப்பூரத்தை பூர்த்தியாகக் கொண்டு 25 தினங்கள் நிகழ்வது என்பதை யாவரும் அறிவீர்கள். மகோற்சவம் என்றாலே துர்க்கேஸ்வரம் களைகட்டும். ஏற்பாடுகள் அனைத்தும் மிகச் சிறப்பு வாய்ந்தவையாக இருக்கும். இந்தக் காலத்தை எதிர்பார்த்திருக்கும் பக்தர்கள் ஏராளம். விரதம் அனுஷ்டிப்பவர் பலர். தினமும் அம்பாள் தரிசனத்துக்கு வருபவர் பலர்.

இந்த ஆண்டு யூலை 21ம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம் அமைவதால், இருபத்தைந்து தினங்களுக்கு முன்னரான யூன் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை மகோற்சவகாலம் ஆரம்பிக்கிறது.

அதே நேரம் துர்க்கேஸ்வரத்தில் மஹாகும்பாபிஷேகத்தினைத் தொடந்து நிகழும் மண்டலாபிஷேகம் யூன் மாதம் 19ம் திகதி ஆரம்பித்து ஆகஸ்டு 5ம் திகதி வரை நாற்பத்தெட்டு தினங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, கொடியேற்றம் போன்ற விஷேட திருவிழாக்கள் நீங்கலாக, வழிபாடுகள் விஷேடமாக இடம்பெறும்.

மகோற்சவகாலத்தில் அடியார்கள் பக்தி சிரத்தையுடன் ஆலயம் வந்து, அனைத்து வழிபாடுகளையும் தரிசித்து, மண்டலாபிஷேக அருள்மேன்மைகளையும் பெற்று நீடுழி வாழ்வீர்களாகுக.

**துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்துக்கு பின்னர் அமைந்த முதல் திருவிளக்கு பூஜை 25-8-2023 வெள்ளிக்கிழமை**

### பகல் வழிபாடு

**காலை 9:30 மணி முதல் பகல் 1:00 மணி வரை**

| | |
|---|---|
| காலை 9:30 மணி | காலை பூஜை |
| காலை 10:00 மணி | கும்பபூஜை ஆரம்பம் |
| காலை 10:30 மணி | திரவ்வியாபிஷேகம் |
| பகல் 11:00 மணி | ஸ்நபனாபிஷேகம் |
| பகல் 11:30 மணி | உச்சிக்கால பூஜை |
| பகல் 12:00 மணி | வசந்தமண்டப பூஜை, தொடர்ந்து அம்பாள் திருவீதி வலம் |
| பகல் 12:45 மணி | அருட்பிரசாத விநியோகம் அன்னதானம் பகல் வழிபாடு நிறைவு |

### இரவு வழிபாடு

**மாலை 6:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை**

| | |
|---|---|
| மாலை 6:00 மணி | சாயரட்சை பூஜை |
| மாலை 6:30 மணி | விஷேட புண்யாகவாசனம் |
| இரவு 7:30 மணி | இரண்டாங்கால பூஜை |
| இரவு 8:00 மணி | வசந்தமண்டப பூஜை, |
| இரவு 8:30 மணி | அம்பாள் திருவீதி வலம் அருட்பிரசாத விநியோகம் அன்னதானம் |
| பகல் 9:00 மணி | இரவு வழிபாடு நிறைவு |

## துர்க்கேஸ்வரத்தில் மண்டலாபிஷேக பூர்த்தி 5-8-2023 சனிக்கிழமை

துர்க்கேஸ்வரத்தில் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவினைத் தொடர்ந்து, 19-6-2023 முதல் தற்போது மண்டலாபிஷேக வழிபாடுகள் காலையும் மாலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 48 தினங்கள் மண்டலாபிஷேக வழிபாடுகளின் பின்னர் மண்டலாபிஷேக பூர்த்தி விழா 5-8-2023 சனிக்கிழமை நடைபெற உள்ளது.

இப்பூர்த்தி விழாவானது 4-8-2023 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விக்னேஸ்வரபூஜையுடன் ஆரம்பமாகி, மறுநாள் 5-8-2023 சனிக்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தி இடம் பெறும்.

4-8-2023 வெள்ளி

| | |
|---|---|
| காலை 10 மணி: | விக்னேஸ்வரபூஜை, புண்யாகவாசனம், அனுக்ஜை |
| மாலை 6 மணி: | 1ம்கால யாகபூஜை, வேத பாராயணம் |


5-8-2023 சனி

| | |
|---|---|
| காலை 10 மணி: | 2ம்கால யாகபூஜை, வேத பாராயணம், ஹோமம் பூர்ணாகுதி, தீபாராதனை மண்டலபூர்த்தி அபிஷேகம் அலங்காரம், தீபாராதனை |

**முழுமையான மண்டலாபிஷேக பூர்த்தி விஞ்ஞாபனம் அடுத்தவார இதழில் காண்க**

# கடிதம் எழுதும் தமிழ்க் கட்சிகள்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



அண்மையில் தனது 90 ஆவது வயதை நிறைவு செய்த ஆனந்தசங்கரி, அரசியலில் அதிகம் கடிதம் எழுதிய ஒரு தமிழ் அரசியல்வாதி ஆவார். கடவுளைத்தவிர அவர் ஏனைய எல்லாருக்குமே கடிதம் எழுதியிருக்கிறார். அவருடைய கடிதங்களுக்கு பதில் கிடைத்ததோ இல்லையோ, அக்கடிதங்கள் அக்காலகட்ட அரசியலில் ஏதும் விளைவுகளை ஏற்படுத்தினவோ இல்லையோ, அவர் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருந்தார். அவை சிலசமயங்களில் துணிச்சலான, பல சமயங்களில் சுவாரசியமான அல்லது பம்பலான அரசியல் ஆவணங்களாகப் பார்க்கப்பட்டன.

இப்பொழுது ஆனந்தசங்கரியிடம் இருந்து ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் அதைக் கற்றுக்கொண்டு விட்டார்கள் போலத்தெரிகிறது. அண்மை நாட்களாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொன்ற கட்சிகளின் தலைவர்கள் இந்தியப் பிரதமருக்கு கடிதங்களை எழுதுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாதம் 21 ஆம் தேதி இந்தியாவுக்கு செல்கிறார். அங்கே அவர் இந்திய பிரதமரை சந்திப்பதற்ககிடையில் தமிழ்க் கட்சிகளின் மூன்று கடிதங்கள் பிரதமர் மோடிக்கு அனுப்பப்படுகின்றன.

முதலாவது கஜேந்திரகுமாருடையது. அக்கடிதம் என்கனவே ஊடங்களுக்குத் தரப்பட்டுவிட்டது. இரண்டாவது சம்பந்தருடையது. மூன்றாவது ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் விக்னேஸ்வரனின் கட்சிகளுடையது.

இக்கடிதங்களின் உள்ளடக்கம் என்னவென்பது ஏற்கனவே ஊடகங்களில் வெளிவந்துவிட்டது. அந்த உள்ளடக்கங்களை தொகுத்து பார்த்தால், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைப்பதாக தெரிகிறது.

இரண்டாவது கடிதம் தமிழரசுக் கட்சியுடையது. இந்தியாவுக்கு ஆறு கட்சிகள் இணைந்து கடந்த ஆண்டின் தொடக்கத்தில் கடிதம் எழுதியபொழுது அதில் தமிழரசு கட்சியும் கையொப்பமிட்டது. கடிதத்தின் உள்ளடக்கத்தை மாற்றுவதில் தமிழரசுக் கட்சி முக்கிய பங்காற்றியது. அக்கடிதம் 13க்குள் முடங்கக்கூடாது என்பதனை வலியுறுத்தி அதற்குப்பால் போக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை தமிழரசு கட்சி ஏற்படுத்தியது. ஆனால் இப்பொழுது தமிழரசு கட்சி தனியாக ஒரு கடிதம் எழுதுகிறது. அக்கடிதமானது 13 வது திருத்தத்தை கடந்து சென்று ஒரு சமஸ்டி கோரிக்கையை-கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைப்பதாகத் தெரிகிறது. இதுவிடயத்தில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் வரைந்த கடிதத்தை சம்பந்தர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிகிறது. அக்கடிதத்தில் அவர் கையெழுத்திட மறுத்து தமிழரசு கட்சியானது தனியாக ஒரு கடிதத்தை எழுதப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கடிதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடையது. அப்படி ஒரு கடிதத்தை எழுதப் போவதாக முதலில் சொன்னது அக்கட்சிதான். தமது கடிதத்தை முதலில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியதும் அக்கட்சிதான். அப்படி ஒரு கடிதத்தை எழுத வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருந்தது. அக்கட்சி பொதுவாக இந்தியாவுக்கு எதிரான ஒரு கட்சியாக பார்க்கப்படுகிறது. ஆனால் அது அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் பொழுது, தான் இந்தியாவின் பாதுகாப்புசார் கவலைகளை விளங்கிக் கொள்வதாகவும் அதுவிடயத்தில் இந்திய இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதாகவும் ஏற்கனவே தெளிவாகத் தெரிவித்துவிட்டது. ஆனால் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் விளைவாக உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை தமிழ் மக்களின் பிரச்சினைக்கான ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் அக்கட்சி தெளிவாக வரையறுத்துக் கூறிவிட்டது. இது அக்கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு.

ஆனால் நடைமுறையில் அக்கட்சியானது தனது உள்ளூர் அரசியல் எதிரிகளை விமர்சிக்கும்பொழுது இந்தியாவின் கைக்கூலிகள், ஏஜென்ட்கள், துரோகிகள் என்றெல்லாம் பட்டம் சூட்டுகின்றது. உள்ளூரில் அக்கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடே மேலோங்கித் தெரிகிறது. அக்கட்சியின் ஆதரவாளர்கள் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் குறிப்பாக சமூகவலைத்தளங்களில் தெரிவிக்கும் கருத்துக்களும் அவ்வாறுதான் காணப்படுகின்றன. மிகக்குறிப்பாக தமது கட்சியை விமர்சிப்பவர்களை தாக்கும்பொழுது அவர்கள் இந்தியாவிடம் காசு வாங்கிக் கொண்டு எழுதுகிறவர்கள், அல்லது இந்தியப் புலனாய்வுத் துறையால் கையாளப்படுகின்றவர்கள் என்ற பொருள்பட அக்கட்சியினர் விமர்சிப்பதுண்டு. தமிழ் அரசியலில் தமது அரசியல் எதிரிகளை துரோகிகளாக சித்தரிக்கும் ஒரு விமர்சனப் பண்பாட்டை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தான் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

தமது கடிதத்தை யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகத்திடம் கையளித்தபின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்களிலும் அது வெளிப்படுகின்றது. நடைமுறையில் இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்துக்கொண்டு உத்தியோகபூர்வமாக இந்தியாவின் பாதுகாப்புசார் நலன்களைத் தாம் ஏற்றுக் கொள்வதாக அக்கட்சி கூறுவதை அகமுரண்பாடு என்று விளங்கிக் கொள்வதா? அல்லது உள்ளூரில் கட்சி மோதல்களில் வெளியுறவு நிலைப்பாடுகளை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்ற முதிர்ச்சி அந்தக் கட்சியிடம் இல்லை என்று எடுத்துக் கொள்வதா?

அக்கட்சி இந்திய பிரதமருக்கு எழுதிய கடிதம் மிகத்தெளிவாக 13வது திருத்தத்தை நிராகரிக்கின்றது. அதேபோல மிகத்தெளிவாக கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைக்கின்றது, மேலும் கடிதத்தின் இறுதி வரியில் "இந்தியாவின் சட்டபூர்வமான பிராந்திய பாதுகாப்பு நலன்களை" அக்கட்சி ஏற்றுக் கொள்வதை கடிதம் மீள வலியுறுத்துகின்றது.

இந்தியா ஒரு எதிரி நாடா? அல்லது கையாளப்பட வேண்டிய ஒரு பிராந்தியப் பேரரசா? என்ற தெளிவு ஈழத்தமிழர்களுக்கு இருக்கவேண்டும். பகைநாடு என்றால், அதன் புவிசார் பாதுகாப்பு நலன்களோடு சமரசம் செய்யத் தேவையில்லை. மாறாக, கையாளப்பட வேண்டிய ஒரு நாடு என்றால், அதை எப்படிக்கையாள்வது என்பது தொடர்பில் பொருத்தமான ஒரு வெளியுறவுத் தரிசனம் இருக்கவேண்டும். அந்த வெளியுறவுத் தரிசனம் உள்நாட்டில் எமது பேரபலம் எது? பிராந்தியத்தில் எமது பேரபலம் எது? உலக அளவில் எமது பேரபலம் எது? என்பது தொடர்பான தொகுக்கப்பட்ட ஆய்வுமுடிவுகளின் அடிப்படையில் அமையவேண்டும்.

**(தொடர்ச்சி 14ம் பக்கம்)**



## மண்டைதீவில் காணி சுவீகரிப்பு நடவடிக்கை மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

இலங்கை செய்திகள் Sri Lanka News



July 12, 2023

யாழ்ப்பாணம் - மண்டைதீவில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மண்டைதீவில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 29 பேருக்கு சொந்தமான 18 ஏக்கர் காணியினை, கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், இன்று அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த கடற்படை முகாமிற்கு முன்பாக இன்று ஒன்றுதிரண்ட மக்கள், காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் எதிர்ப்பால் காணி அளவிட எடுத்த முயற்சி, கைவிடப்பட்டது. குறித்த எதிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், செல்வராசா கஜேந்திரன், வட மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் நிறைவில் போராட்டகாரர்களுக்கு பிஸ்கட் குளிர்பானம் வழங்க வந்த கடற்படையினருக்கு அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் பொதுமக்கள் கோஷம் எழுப்பி கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அப்போது கோபமடைந்த காணி உரிமையாளரான பெண்மணி ஒருவர் "எங்கட காணியை விட்டு எழும்பி போங்கோ. அதற்கு பிறகு பிஸ்கட் சாப்பிடுவோம்" என கடற்படை அதிகாரியை பார்த்து கடுமையாகப் பேசினார் எனவும் எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

## இணுவிலில் உள்ள பாடசாலை ஒன்றில் மாணவியை பிரம்பினால் தாக்கியது உண்மை – பாடசாலை அதிபர் விளக்கம்

வலிகாம வலயப் பிரிவில் இணுவிலில் உள்ள பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி மீது பாடசாலை ஆண் ஆசிரியர் பிரம்பினால் தாக்கியது உண்மை என குறித்த பாடசாலையின் அதிபர் விளக்கம் அளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த மாணவி ஒரே நாளில் இரண்டு வெவ்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கதற்காக இருந்த நிலையில் ஒரு நிகழ்வில் பங்கேற்க முடியாத சூழலை ஏற்பட்டது.

இதன் காரணமாக கோபம் அடைந்த ஆசிரியர் மாணவியின் காலில் தழும்புகள் ஏற்படும் வகையில் மூன்று தடவைகள் பிரம்பினால் தாக்கியுள்ளார்.

குறித்த விடையம் சிறுவர் நன்னடத்தை உத்தியோத்தருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிசார் குறித்த ஆசிரியரையும் மாணவியின் உறவினர்களையும் பொலிஸ் நிலையம் வரவழைத்தனர்.

ஆசிரியர் தான் செய்த தவறுக்காக மன்னிப்பு கேட்ட நிலையில் பாடசாலையின் நலன் கருதி குறித்த சம்பவத்தை சமரசமாக பொலிஸ் நிலையத்தில் தீர்த்துக் கொண்டனர்.

மாணவிக்கு காலில் தழும்புகள் ஏற்பட்டதை தவிர வேறு எந்த உடல் உளப் பாதிப்புகளும் ஏற்படாத நிலையில் குறித்த மாணவி தனது அன்றாட கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வெண்கலப் பதக்கம் வென்ற கிளிநொச்சி வீராங்கனையை கௌரவிக்கும் நிகழ்வு



இந்தியா - புது டில்லியில் கடந்த 18.06.2023 நடைபெற்ற பகிரங்க சர்வதேச ச ம் பி ய ன் ஷி ப் கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனை செல்வி தவராசா சானுயாவை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த சுற்றுப் போட்டியில் 12 நாடுகள் பங்குபெற்றிருந்த நிலையில் மூன்றாம் இடத்தை பெற்று வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தினை வென்ற செல்வி தவராசா சானுயாவை கொரவிப்பதற்காக இன்றைய தினம் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பதில் தூதுவர் ராம் மகேஸ், கிளிநொச்சி மாகாதேவ ஆச்சிரமத்திற்கு சென்றிருந்தார்.

குறித்த மாணவியை நேரில் சென்று வாழ்த்து தெரிவித்துடன், சாதனை மாணவிக்கு மதிப்பளித்தார்.

குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் கலந்து கொண்டார்.





## வேலை வாய்ப்பிற்காக காத்திருக்கும் யாழ்ப்பாண இளைஞர் யுவதிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி!

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்காராவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15ம் 16ம் திகதிகளில் தொழிற்சந்தை நிகழ்வு இடம்பெறவுள்ளதாக நிகழ்வின் இணைப்பாளர் பாபு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பொன்றை நடாத்தியவேளை அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இம் மாதம் 15 மற்றும் 16ம் திகதிகளில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்காரவின் ஏற்பாட்டில் "வடக்கின் ஒளிமயம்" எனும் தொனிப்பொருளில் 'Global fair 2023" நடைபெறவுள்ளது.

இரு தினங்களாக நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில் இரவு 7 மணிமுதல் 12 மணிவரை இசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. அனைத்து பார்வையாளர்களுக்குமான அனுமதி இலவசமாக் காணப்படும்.

இதில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் தொடர்பான ஆலோசனைகள், சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகள் பயன்பெறலாம்.

வெளிநாட்டு தொழில்களின் போதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அமைச்சு, ஊழியர் சேமலாப, நம்பிக்கை நிதியப் பிரச்சினைகளான தீர்வுகளுடன் தொடர்பான அமைச்சு, தொழிற்துறை சம்பந்தமான வாய்ப்புக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புக்கள் தொடர்பான அமைச்சு மற்றும் பயிற்சிக்கான அமைப்புக்கள் இத் தொழில் வாய்ப்பு சந்தையில் பங்கெடுக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.



## பேராதனை போதனா வைத்தியசாலையில் மேலும் ஒரு சந்தேகத்திற்கிடமான மரணம்

(12-07-2023)

பேராதனை போதனா வைத்தியசாலையில் மற்றொரு சந்தேகத்திற்கிடமான மரணம் பதிவாகியுள்ளது.

சமோதி சங்தீபனி (21 வயது) கடந்த திங்கட்கிழமை வயிற்றுப்போக்கு காரணமாக கெட்ட பிட்டிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் இரவு அந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற அவர், பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு saline ஏற்றப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர் கை கால்கள் நீல நிறமாக மாறி, கீழே விழ்ந்ததாக சமோதி சங்தீபனியின் தாயார் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அவருக்கு ஊசி ஏற்றப்பட்ட பின்னர் எரிவதாகக் கூறியதால், மீண்டும் ஒரு ஊசி ஏற்றப்பட்டதாகவும், கண்கள், வாய் எரிவதாக சமோதி சங்தீபனி தனது தாயிடம் கூறியதாகவும் அவரின் தந்தை தெரிவித்தார்.

ஏற்றப்பட்ட ஊசியில் பிரச்சினை இருப்பதாக சங்தீபனியின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் அர்ஜுன திலகரத்ன தெரிவித்தார்.

எனினும், சிகிச்சை அளிக்கப்பட்ட போது குறித்த யுவதி உயிரிழந்துள்ளதாகவும் அதற்கான காரணம் இன்னமும் அறியப்படவில்லை எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் கூறினார்.

சிக்கல்களுக்கு உள்ளான எந்தவொரு மருந்தும் அவருக்கு வழங்கப்படவில்லை எனவும் அவருக்கு வழங்கப்பட்ட மருந்து வைத்தியசாலையில் ஏனைய நோயாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, பேராதனை போதனா வைத்தியசாலையில் Bupivacaine என்ற மயக்க மருந்து வழங்கப்பட்ட நிலையில், இரண்டு பெண்கள் உயிரிழந்தனர். அந்த மருந்தின் ஒரு தொகுதியில் ஒரு பதார்த்தம் குறைவாக இருந்தமையே உயிரிழப்பிற்குக் காரணம் என்பது பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் உறுதியானது. தற்போது அந்த மருந்தின் பயன்பாடு நிறுத்தப்பட்டுள்ளது.



## கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சார் கூட்டம் கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில்

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சார் கூட்டம் 12ம் திகதி கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், கிளிநொச்சி கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கமக்கார அமைப்பினர் தமது நெல்லுக்கான உரிய விலை கிடைக்கப்படாத காரணத்தினால் தாம் பல்வேறு வகையிலும் பாவிக்கப்பட்டதாகவும் இதற்கு தீர்வுகளை பெற்றுத்தர வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அடுத்து கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் தெரிவிக்கையில், ஒரு கிலோ நெல்லுக்கான விலை 95 ரூபாய் எனவும், ஒரு விவசாயிடமிருந்து 5000 கிலோ நெல்லினை நாளை முதல் நெல் சந்தைப்படுத்தல் சபையின் ஊடாக கொள்வனவு செய்ய உள்ளதாக தெரிவித்துள்ளார்.



# இந்திய சரக்குக் கப்பல் மன்னாரில் தரை தட்டியது



- எமது செய்தியாளர்

இந்தியாவிற்குச் சொந்தமான மிகப் பெரும் சரக்குக் கப்பல் ஒன்று மன்னார் பேசாலைப் பகுதியில் தரை தட்டியுள்ளது. “அதுல்ய” என்ற பெயருடைய அந்த சரக்குக் கப்பல், மாலைத்தீவிலிருந்து இந்தியவிற்கு பயணித்துக்கொண்டிருந்த போதே நடுக்குடா பகுதியில் பலத்த காற்று காரணமாக இலங்கை கடற்பரப்பை நோக்கி தள்ளப்பட்டது.

இந்திய கரையோரத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அலையில் அடித்து வரப்பட்ட நிலையிலேயே அந்த சரக்குக் கப்பல் பேசாலை கடற்பரப்பில் தரை தட்டியுள்ளது.

இம்மாதம் 6ஆம் திகதி, சென்னையிலுள்ள கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு மையம், “அதுல்ய” சரக்குக் கப்பலை இழுத்துவந்த இழுவைக் கப்பல் “அவத்” தொழில்நுட்ப பிரச்சனைகளில் சிக்கியுள்ளதாகவும், உதவி கோரி தமக்கு அறிவித்ததாகவும் கொழும்பிலுள்ள அந்த மையத்திற்கு அறிவித்ததை அடுத்து, தமது கடற்படை உதவிக்கு சென்றதக இலங்கை கடற்படை அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

கடற்பரப்பிலிருந்து சுமார் 250 மீற்றர் தூரத்தில் அந்த கப்பல் தரைதட்டியுள்ளது. இதில் பணியாற்றிய 9 பணியாளர்களும் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு கரை சேர்த்துள்ளனர்.

இந்த கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 9 பணியாளர்களில் 4 பேர் இந்தியர்கள் எனவும் ஐவர் இந்தோனேசியர்கள் எனவும். கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

அந்த கப்பல் பேசாலை கடற்கரை பகுதியில் தரைதட்டிய சமயம் அதில் சரக்குகள் ஏதும் இருக்கவில்லை என்றும் அது அடுத்த பயணத்திற்கு சரக்குகளை ஏற்றிச் செல்வதற்காக காலியக இருந்த நிலையில், இழுத்துச் செல்லப்பட்டது என்று இந்திய கப்பல் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


இயந்திர கோளாறு காரணமாக பழுதடைந்து காற்றின் சீற்றம் காரணமாக கரையொதுங்கிய அந்த படகு இலங்கை உதவியுடன் சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை கடற்படை கூறுகிறது. அந்த நடவடிக்கை சர்வதேச நியமங்களின் அடிப்படையில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“அதுல்ய” சரக்குக் கப்பலிலிருந்து சுற்றுசூழலிற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய எந்த பொருட்களும் இலங்கை கடற்பரப்பில் கலக்கவில்லை என்று கடைசியாக கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

அந்த கப்பல் உரிமையாளர்களும், இந்திய கப்பல் கழகத்தின் அதிகாரிகளும் இலங்கை பயணமாகின்றனர்.



# மட்டக்களப்பில் 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல் வெளியீடு




கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் - இலங்கை, சிவராம் ஞாபகார்த்த மன்றம் - சுவிஸ் ஆகியன இணைந்து தொகுத்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய “தராக்கி“ ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொகுப்பில் ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41பே எழுதிய கட்டுரைகள் இத்தொகுப்பில் உள்ளடங்குகின்றன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், ஊடகவியலாளர் ஊடகவியலாளர் சபீனா சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தினை மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்துகிறார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், செல்வராசா கஜேந்திரன், இராசபுத்திரன் சாணக்கியன் ஆகியோரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி, பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், காத்தான்குடி நகர சபை நூலகல் திருமதி க.ருத்ரகுமார், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆர்.பாரதி “ஆகவே” ஜபார், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பெர்டி கமகே ஆகியோரும் உரையாற்றவுள்ளனர். நிகழ்வின் நிறைவாக கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் நன்றியுரையைற்றுவார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News




# வடக்கில் சீனி தொழிற்சாலையானது இனிப்பு தடவிய விஷம் – பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை

வவுனியாவில் அந்நிய முதலீட்டுடன் பாரிய சீனித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கும், அதற்குரிய பாரிய கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அண்மையில் அவசரம் அவசரமாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அத்தோடு, தொழிற்சாலையின் அமைவிடத்துக்கெனவும் கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கெனவும் முதற்கட்டமாக 74,100 ஏக்கர்கள் அளவு காணியை விடுவிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பு, இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கென வாராதுவந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாய்ச் சிலாகித்து வருகிறது. ஆனால், இதன் உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனித் தொழிற்சாலை இனிப்புத் தடவிய விஷம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

வவுனியாவில் சீனித்தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வங்கியுள்ளமை தொடர்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் பொ.ஐங்கரநேசன் வெள்ளிக்கிழமை (07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில், அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்கும்போது திட்டத்தின் பொருத்தப்பாட்டை அறிந்துகொள்ள நீர் அடிச்சுவடு என்ற நீர்த் தேவையே சூழலியற் குறிகாட்டியாக முதலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது. கரும்பினதும் சீனியினதும் நீர்அடிச்சுவடு மிகவும் உயர்வானது. ஒரு கிலோ கரும்பை உற்பத்தி செய்வதற்கு 210 லீற்றர் தண்ணீரும், ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியை உற்பத்தி செய்வற்கு 1780 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

கரும்பு வருடம் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டிய ஒரு பல்லாண்டுப் பயிருமாகும். இவற்றின் அடிப்படையில் பேராறுகள் எதுவுமே இல்லாத வரண்ட வலயமான வடக்கில் பெருமளவு நீரை விழுங்கும் சீனி உற்பத்தியை முன்னெடுப்பது பேராபத்தாகும்.

நீர்ச்சமநிலையைக் குழப்பி அத்தியாவசிய உணவுப்பயிர்களின் உற்பத்தியிலும் பாரிய பாகிப்புகளை ஏற்படுத்தும். ஈற்றில் அம்மண்ணைப் பாலையாக்கியும் விடும்.

கரும்பு மிக அதிகளவில் இரசாயன உரங்களையும், பீடைகொல்லி - களைகொல்லி நஞ்சுகளையும் வேண்டி நிற்கும் ஒரு பயிர். தொடர்ச்சியாக விவசாய இரசாயனங்களால் குளிப்பாட்டப்படும் மண்ணில் நுண்ணங்கிகள் அழிந்து தொடர்ந்து பயிரிடமுடியாதவாறு மண் மலடாகி விடுகிறது.

கந்தளாய்ச் சீனித்தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டிருப்பதற்குக் கரும்பில் இருந்து இனிமேலும் அதிக விளைச்சலைப் பெறமுடியாத அளவுக்கு நிலம் தரம் இழந்ததும் ஒரு காரணம் . விவசாய இரசாயனங்கள் நீரோடு கலந்து குடிநீரையும் மாசடையச் செய்கிறது.

வவுனியா ஏற்கனவே சிறுநீரக நோய்களின் ஆபத்து அதிகமாகவுள்ள மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. விவசாய இரசாயனங்கள் கலந்த குடிநீரை அருந்தியதால் ஏராளமானோர் சிறுநீரகங்கள் செயலிழந்து அவதிப்படுகின்றனர். இந்நிலையில் கரும்புச் செய்கை வவுனியாவின் நிலத்தினதும் மக்களினதும் ஆரோக்கியத்துக்குப் பெருங்கேடாகவே முடியும்.

கரும்புச் செய்கைக்கும் சீனித்தொழிற்சாலைக்கும் ஒதுக்கப்பட்ட காணியின் அளவு வவுனியாவின் மொத்த பரப்பில் ஆறு விழுக்காடுக்கும் அதிகம். இந்தப் பாரிய இடத்தைக் காடுகளை அழித்தே பெறமுடியும், மக்கள் போரினால் இடம்பெயர்ந்ததன் காரணமாகக் கைவிடப்பட்ட மேய்ச்சல் தரைகளையெல்லாம் அங்கு மரங்கள் வளர்ந்ததைக் காரணங்காட்டிக் காடுகள் என எல்லைகள் போட்ட வனவிலங்குத் திணைக்களம் இப்போது அதே காடுகளை கரும்புச் செய்கைக்கு விடுவிப்பதற்கு இணங்கியுள்ளது.

காலநிலை மாற்றங்களால் பாதிக்கப்படப்போகும் நாடுகளது பட்டியலில் இலங்கையும் அடங்கியுள்ள நிலையில் அதனைக் கருத்திற் கொள்ளாது காடுகளை அழித்து சீனித் தொழிற்சாலையை அமைப்பது குருட்டுத்தனமான முடிவாகும். இது தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபிவிருத்தி என்ற பெயரால் நிரந்தரமாகவே கையகப்படுத்தும் ஒரு தந்திரமுமாகும்.

சீனித்தொழிற்சாலை சிங்களக் குடியேற்றத்துக்கும் வித்திடும் என்ற சந்தேகமும் உள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கம் விவசாயத்தை மேம்படுத்தல் என்று சொல்லப்பட்டபோதும் அதன் உள்ளார்ந்த நோக்கம் சிங்களக் குடியேற்றமாகும். அதுவும், குடியேற்றப்படும் இடத்தின் இனவகிதாசாரப்படி இல்லாமல் இலங்கையின் விகிதாசாரத்தின்படியே குடியேற்றங்களை மேற்கொள்வது மகாவலி அதிகார சபையின் எழுதப்படாத அதிகாரம்.

மகாவலியுடன் இணைக்கப்பட்ட கந்தளாய்க் குளத்தை மையப்படுத்தி நிகழ்ந்த பயிர்ச்செய்கையே தமிழ் நிலமான கந்தளாயை இன்று முற்றுமுழுதாக சிங்களவர்களின் நிலமாக்கியது. வவுனியாவிலும் கரும்புக்கு நீர்பாய்ச்சுகிறோம் என்று சொல்லி வவுனியாவின் குளங்களோடு மகாவலியைத் தொடுத்து நிலங்களை மகாவலி அதிகாரசபை தன்வசமாக்கலாம்.

மகாவலியில் நீர்வரத்து இருக்கிறதோ இல்லையோ இதனூடாகச் சிங்களக் குடியேற்றம் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாகவே உள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட எம்மக்களின் வாழ்வை மேம்படுத்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது அவசியம். ஆனால், வடக்கின் மண்ணுக்கும் மக்களுக்கும் பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்கள் எத்தனையோ இருக்கும்போது எவ்வித்திலும் பொருந்தாத சீனித் தொழிற்சாலையை வரவேற்பது அறிவுடையோரினதோ, தமிழ்த் தேசியப் பற்றாளர்களினதோ செயலாக இருக்காது. நீண்ட நெடிய வலிமிகுந்த தேசிய விடுதலை.

போராட்டத்தை முன்னெடுத்த இனம் நாம். இப் போராட்டம் எதிர்கால சந்ததியின் வளமான வாழ்வுக்காக மண்ணின் வளங்களைக் காப்பாற்றி அவர்களிடம் கையளிப்பதையும் உள்ளடக்கியதுதான். மண்மீட்கப் புறப்பட்ட நாம் அம்மண் பாலையாகுவதற்கோ மலடாகுவதற்கோ எதன் பொருட்டும் அனுமதிக்க முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வடக்கு ஆளுநர் தயாரா – சபா குகதாஸ்

புலம்பெயர் தமிழர்களை வடக்கில் முதலிடு செய்ய வருமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் அவர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளார். புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் வடக்கல்ல தமிழர் தாயகத்தை தாண்டியும் முதலீடு செய்ய தயாராக உள்ளனர் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார்.

சனிக்கிழமை (08) அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

புலம்பெயர் தமிழர்களை வடக்கில் முதலிடு செய்ய வருமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் அவர்கள் ஊடகங்களில் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளார்.

ஆளுநரின் கோரிக்கைக்கு முன்பாக கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் புலம்பெயர் தமிழர்களிடம் இந்த கோரிக்கையை நேரடியாக முன் வைத்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளுக்கு நேரடியாக சென்றும் தமிழர் பிரதிநிதிகளிடம் கேட்டுள்ளார். அதற்கு புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தங்கள் முக்கியமான கோரிக்கைகள் அடங்கிய எழுத்துமூல கடிதத்தை ஊடகங்களுக்கும் உரிய தரப்புகளுக்கும் வழங்கியுள்ளனர் அதற்கான ஆரோக்கியமான பதிலை இதுவரை அரசாங்கம் வழங்கவில்லை.

இவ்வாறான நிலையில் வடக்கு ஆளுநரின் கோரிக்கை வந்துள்ளது. உண்மையில் புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் வடக்கல்ல தமிழர் தாயகத்தை தாண்டியும் முதலீடு செய்ய தயாராக உள்ளனர்.

ஆளுநர் ஜனாதிபதியின் நேரடி முகவராக இருப்பதால் புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு முன்வைத்துள்ள கோரிக்கைகளை ரணில் விக்கிரமசிங்காவுடன் கலந்துரையாடி நிறைவேற்ற தயாரா? அப்படி நிறைவேற்றிய பின்னர் இவ்வாறான கோரிக்கையை முன் வைத்தால் சிறந்த முன்மாதிரியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதாரத்தில் நலிவுற்ற பாடசாலை மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு நலத்திட்டங்கள்



யாழ். வண்ணை ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலய தொண்டர் சபையின் ஏற்பாட்டில் ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ். வண்ணை ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த யூன் 9ஆம் திகதியுடன் ஆரம்பமாகியது. இந்நிலையில் முன்தினம் 06/07/2023 வைரவர்சாந்தி உற்சவத்தினை முன்னிட்டு ஆலய தொண்டர் சபையின் நிதிப் பங்களிப்பில் ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 100 மாணவர்களுக்கு தலா 4000 மதிப்புள்ள கற்றல் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கான காசோலைகள் (பவுச்சர்கள்) வழங்கிவைப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக செஞ்சோற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், ஆலய குருக்களான சிவதர்சக்குருக்கள், ஹரிதர்சக் குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான காசோலைகளை வழங்கிவைத்தனர்.



சைவ ஆலயங்கள் மக்கள் நலப்பணிகளில் ஈடுபடுவதில்லை என தற்காலத்தில் விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் யாழ். வண்ணை ஸ்ரீ வீரகாளி அம்மன் ஆலய தொண்டர் சபையின் ஏற்பாட்டில் இவ்வாறு ஆலயச் சூழலிற்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கற்றல் மேம்படுத்தல் நலத் திட்டங்கள் மேற்கொள்வது வரவேற்கத் தக்கது என சமூக ஆர்வலர்கள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நாட்டில் நிலவிய பொருளாதார ஸ்திரமின்மையான காலப்பகுதியில் ஆலய தொண்டர் சபையினால் உலருணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஈழத்து முன்னனி எழுத்தாளரும், ஆய்வாளரும், நூல் வெளியீட்டாளருமான, சர்வதேச ரீதியில் புகழ் பெற்றவரும், தற்போது புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் மாத்தளை சோமு மொரீசியஸ், ரியூனியன், சீசெல்ஸ், மலேசியா, தமிழகம், ஆகிய நாடுகளுக்கு இலக்கியப் பயணம் மேற்கொள்கின்றார்




எதிர்வரும் ஜுலை மாதம் 18 ஆம் திகதி மொரீசியஸ் நாட்டிற்கு விஜயம் செய்யும் மாத்தளை சோமு மொரீசியஸ் மகாத்மாகாந்தி நிலையத்தில் நடைபெறும் கருத்தரங்கு மற்றும் இலக்கிய சந்திப்புகளிலும் கலந்துரையாடல்களிலும் கலந்து கொள்கிறார். மொரீசியஸ் கல்வியாளர் ஸ்டீபன் நாராயணப்பிள்ளை இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார். தொடர்ந்து இந்திய வம்சாவளி மக்கள் மாசபை மொரீசியஸ் பிரமுகர்களையும் சந்தித்து கலந்துரையாடுகின்றார். ரியூனியன், சீசெல்ஸ், நாடுகளுக்கு சென்று அங்குள்ள கலைஇலக்கிய பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடுகின்றார்.

ஜுலை மாதம் 28 ஆம் திகதி மலேசிய நகரான ஈப்போவில் நாடாளுமன்ற உறுப்பினரான திரு குலசேகரன் பிரதம அதிதியாக பங்கு பெறும் மாத்தளை சோமு எழுதிய "வியக்க வைக்கும் பழந்தமிழர் சிந்தனைகள்" நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள மாத்தளை சோமு படைப்புகள் குறித்த பல்வேறு தலைப்புகளிலான ஒரு நாள் கருத்தரங்கிலும் கலந்து கொண்டு ஏற்புரை வழங்குவார். இக் கருத்தரங்கை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வை. இராமராஜ பாண்டியன், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் உ. அலிபாபா, மதுரை காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர்



பேராசிரியர் பா. ஆனந்தகுமார் ஆகியோர் ஒருங்கிணைக்க உள்ளார்கள். தமிழகம் உட்பட இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

கருத்தரங்கில் மாத்தளை சோமு எழுதிய புலம்பெயர் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிறுகதைகள் அடங்கிய "ஒற்றைத்தோடு" என்ற சிறுகதை தொகுப்பு, கருத்தரங்கு கட்டுரைகள் அடங்கிய நூல் என்பனவும் வெளியிடப்படவுள்ளன. மேலும் இதுவரை அவர் எழுதிய சிறுகதைகளில் தெரிவுசெய்யப்பட்ட 100 சிறுகதைகள் கொண்ட இரண்டு தொகுதிகள் பேராசான் மு. நித்தியானந்தன் முன்னுரையோடு விரைவில் வெளிவர இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்கருத்தரங்கு மலையக எழுத்துக்கும், புலம் பெயர் எழுத்துக்கும் கிடைத்த அங்கீகாரமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(10ம் பக்கத் தொடர்ச்சி)

## கடிதம் எழுதும் தமிழ்க் கட்சிகள்?

உள்நாட்டுக் கொள்கைக்கு வெளியே வெளியுறவுக் கொள்கை என்று ஒன்று இருக்க முடியாது.

தமிழ்க் கட்சிகள் இந்தியாவுக்கு கடிதம் எழுதுகின்றனவென்றால், அதுவும் ரணில் அங்கு போகவிருக்கும் ஒரு பின்னணியில் மூன்று கடிதங்கள் அனுப்பப்படுகின்றனவென்றால், இந்தியாவை ஏதோ ஒருவிதத்தில் கையாள வேண்டிய தேவை உண்டு என்று மேற்படி கட்சிகள் நம்புகின்றன என்று பொருள். இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா தவிர்க்கப்படவியலாத கையாளப்பட வேண்டிய ஒரு சக்தி என்பதை மேற்படி கடிதங்கள் உணர்த்துகின்றன. ஆயின் இந்தியாவை கையாள்வதற்கு மேற்படி கட்சிகளிடம் எவ்வாறான வெளியுறவுக் கொள்கை உண்டு? அதற்கு வேண்டிய ஏதாவது நிபுணத்துவக் கட்டமைப்பு அவர்களிடம் உண்டா? இல்லை. அப்படிப்பட்ட வெளியுறவுத் தரிசனங்கள் இருந்திருந்தால் ரணில் பிரதமர் மோடியை சந்திக்கப்போகும் ஒரு காலகட்டத்தில் கடிதம் எழுதிக் கொண்டிருப்பதை விடவும் அதற்கு முன்னரே அதாவது ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிடம் இருந்து தனக்கு அழைப்பு வரவேண்டும் என்று காத்துக் கொண்டிருந்த; அதற்காக உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் அந்த இடையூட்டுக்குள் புகுந்து வேலை செய்திருக்க வேண்டும்.

ஆனால் எந்த ஒரு தமிழ்க்கட்சியும் அதைச் செய்யவில்லை. இப்பொழுது எதிர்த்தரப்பு முன்னெடுக்கும் ஒரு நகர்வுக்கு பதில்வினையாற்றும் நடவடிக்கையாகவே கடிதம் எழுதப்படுகின்றது. அதாவது ரியாக்டிவ் டிப்ளமோ மசி.

கடந்த ஆண்டு ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபொழுது அதை இந்தியா விரும்பவில்லை என்று கருதப்பட்டது. டளஸ் அழகப்பெருமவை ஆதரிக்குமாறு இந்தியா கூட்டமைப்பைக் கேட்டதாக அப்பொழுது தகவல்கள் வெளிவந்தன. ஜனாதிபதியாக வந்ததும் ரணில் இந்தியாவுக்குச் செல்வதற்கு இந்தியாவிடமிருந்து அழைப்பு வரவில்லை. அதற்காக அவர் ஏறக்குறைய ஓராண்டு காலம் உழைக்க வேண்டியிருந்தது. இப்பொழுதுதான் அந்த அழைப்பு வந்திருக்கிறது. இவ்வாறு ரணில் இந்தியாவை நெருங்கிச் செல்வதற்கு உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலப்பகுதிக்குள் தமிழ்க் கட்சிகள் இந்தியாவை எப்படி நெருங்கலாம் என்று திட்டமிட்டு உழைத்திருக்க வேண்டும். ஆனால் அந்த வாய்ப்பைத் தமிழ் கட்சிகள் பயன்படுத்தவில்லை.

கடந்த 2021ஆம் ஆண்டு இந்தியா கூட்டமைப்பை-அப்பொழுது கூட்டமைப்பாகத்தான் இருந்தது-டெல்லிக்கு வருமாறு அழைத்தது. ஆனால் சம்பந்தர் பொருத்தமற்ற காரணங்களைக் கூறி அந்த அழைப்பை நிராகரித்தார். எந்த துணிச்சலில் அவர் அதைச் செய்தார்? அல்லது எந்தப் பேர பலத்தை வைத்து அப்படி ஒரு முடிவை எடுத்தார்? இன்றுவரையிலும் அவர் அதை யாருக்கும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆனால் இந்தியாவின் அழைப்பை சம்பந்தர் நிராகரித்துவிட்டார். அதன்பின் இந்தியா தமிழ்த் தலைவர்களை டெல்லிக்கு அழைக்கவில்லை. அதாவது சிங்களத் தலைவர்களையும் அழைக்கவில்லை; தமிழ்த் தலைவர்களையும் அழைக்கவில்லை. ஆனால் அரசுடைய தரப்பாகிய சிங்களத் தலைவர்கள் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவை வெற்றிகரமாகக் கையாண்டு புதுடில்லியை நெருங்கி சென்று விட்டார்கள். ஆனால் அரசற்ற தரப்பாகிய தமிழ்த் தரப்போ கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறது?

ரணில் ஒரு புத்திசாலி தந்திரசாலி என்று தமிழர்கள் கூறிக் கொள்ளுகிறார்கள். அப்படியென்றால் ஒரு தந்திரசாலியை எதிர்கொள்வதற்கு தமிழ் மக்கள் எப்படிப்பட்ட தந்திரங்களை வகுத்து வைத்திருக்கிறார்கள்? ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிசபைத் தேர்தலை அறிவித்தபொழுது அதை நம்பி சுவரொட்டிகளை அடித்த தமிழ்க் கட்சிகள்தானே? அதுவும் பொருளாதார நெருக்கடி காரணமாக ஒரு சுவரொட்டிக்கு பெருமளவு காசைச் செலவழிக்க வேண்டியிருந்த ஒரு பின்னணியில், ரணிலின் அறிவிப்பை நம்பி தமிழ்க் கட்சிகள் சுவரொட்டிகளை அடித்தன. அல்லது நட்டப்பட்டன என்றும் சொல்லலாம். இப்பொழுது அவர் டெல்லிக்கு போகிறார் என்றதும் ஆனந்தசங்கரியை போல கடிதம் எழுதத் தொடங்கி விட்டார்களா?

உ
ஸ்கந்தன் துணை

ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடா
SKANDAVARODAYA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION
CANADA

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா

வருடாந்தப் பொதுக் கூட்டம்
வருடாந்த கோடைகால ஒன்றுகூடல், விளையாட்டுப் போட்டிகள்

எமது கல்லூரி நூற்றியிருபத்தி ஒன்பது (129) ஆண்டுகள் தனது சிறப்பான கல்விச் சேவையை நிறைவு செய்துள்ள இவ்வேளையில் நாம் எமது முப்பத்தி மூன்றாவது (33) வருடாந்த கோடைகால ஒன்றுகூடல். விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றை எதிர்வரும் யூலை மாதம் 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (Sunday, July 16, 2023) காலை 10.00 மணியளவில் ஸ்டீல்ஸ் (Steeles / Middlefield) சந்திப்பில் அமைந்துள்ள மிலிக்கென் பூங்கா B பகுதியில் (Milliken Park – Area B) வழமை போல் மிகச் சிறப்பாக நடாத்தத் தீர்மானித்துள்ளோம். எமது வருடாந்தப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

சிறுவர்களுக்கான பலவிதமான விளையாட்டுப் போட்டிகளுடன். பெரியவர்களுக்கான பல்சுவை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இத்தோடல்லாமல் மதியபோசன உணவும் வழங்கப்படும்.

கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மேலும் விபரங்களுக்கு:-

S. தவபாலன்: 647 607 7048
T. சிவபாதசுந்தரம்:- 416 909 9617
T. சந்திரகுமார்: - 416 271 4078
நடா G. நடராஜா: – 416 616 8751


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# Upcountry Tamils Across the Palk Straits Demand International Intervention into their plight

- Siva Prameswaran



Tamil people in the plantation sector both in India and Sri Lanka have demanded an international intervention into their miseries, socio-economic backwardness, division of families and loss of lives and property for over decades.

A resolution to this effect and to take India, Sri Lanka and the UK to the International Court of Justice (ICJ) to seek redressal for what they call "gross violation of Human Rights" for two centuries.

The meeting was organized by the Indian Origin Upcountry Tamils front-an organization comprising of those who were repatriated to India under the controversial Sirimavo-Shastri pact in 1964.

The declared objective of this agreement was that all persons of Indian origin in Ceylon who have not been recognised either as citizens of Ceylon or as citizens of India should become citizens either of Ceylon or of India.

Over 525,000 persons who were repatriated such under the pact claim they have not been fully integrated into the Indian society and have been constantly facing socio-economic difficulties coupled with serious livelihood problems.

"The repatriation has put us in a very vulnerable position and that was due to the very wrong policy of the British, Sri Lankan and the Indian government. The British government took us as indentured labourers to work in coffee and tea estates to suit their economic benefits. After a century and Half the Sri Lankan government under Sirimavo Bandaranayake in a sinister move to satisfy the growing demand of the right-wing Sinhala Buddhist chauvinism repatriated us dividing our families and friends. The Indian government which accepted us did not take the necessary steps to reintegrate us into the Indian society. As such we are living in a state of limbo for over six decades" said M.S. Selvaraj, National President of the Indian Origin Upcountry Tamils Front.

Tamil Progressive Alliance leader and Colombo district parliamentarian Mano Ganesan who participated in the meeting as the special invitee said, "the Indian foreign policy on Sri Lanka by the successive governments has failed, and that's the prime reason for not only the issues faced by the upcountry Tamils but also the Eelam Tamils."

Mano Ganesan added the time has come for the Indian Origin Tamils (IOT) and those repatriated under the 'devious Sirimavo-Shastri pact' to work jointly to seek justice from the international community.

"I support the move to internationalize the issue"

Citing the examples of indentured labourers from India taken to work in Sugarcane, Tobacco, Coffee, Tea, Rubber and other plantations in the Caribbean, Fiji, Mauritius, Malaysia, and other places he said, "the lives of those who went there are far better than the lives of those who were taken to Sri Lanka whose lives are still miserable. While they have been fully integrated into the mainstream society socio-economically ad politically, those in the nearby island nation were left in the lurch".

Adding further Mano Ganesan said, "by dividing the IOT, we were politically weakened. If such a repatriation has not happened then numerically they would be the second largest community in Sri Lanka. In such a scenario the number of Tamils MPs in the present-day context would have been at least 40 with a minimum of 25 being elected from upcountry".

He further blamed the policies of the governments of Sri Lanka, India and the UK for their plight and misery of the upcountry Tamils across the Palk straits.





P. T. John, President of the Kerala State Agriculturalists Federation called upon the meeting to pass a resolution to take the case of the upcountry Tamils in both India and Sri Lanka to the International Court of Justice, which was passed. He recalled how the plantation Tamils in Kerala and Tamil Nadu stood with the Eelam Tamils in their struggle for over 40 years. "We were always with them, and their support to us globally would be very helpful when we face a uncertain future".

Tamil Nadu based senior journalist and human rights activist TSS Mani echoed the sentiments of the repatriated plantation Tamils from Sri Lanka saying, "this is a fit case to be brought before international forums including the ICJ. The backwardness and plight of these people was part of a planned strategy by Sri Lanka and India aided by the British to divide and weaken the strong plantation community Tamils in Sri Lanka".

He further said, internationalizing the issue is the first step towards seeking natural justice and reparation for the IOT people in Sri Lanka.

"Indian foreign policy should be based on the welfare of the Tamil people rather than maintaining a friendly relationship status with Sri Lanka" said Esan Murugesan President of the Tamil Nadu Agriculturalists protection movement and Human Rights lawyer. He called upon the state and central governments to convert the plantation workers into agriculturalists, and it is easy for them to do it.

Secretary of the Tamil Nadu agriculturalists joint federation K.A.Subramaniam pointed out the trend both in Tamil Nadu and Sri Lanka of Tea estates being gradually closed, which jeopardizes the lives of thousands of workers whose only livelihood was out of the skills related to the tea plantations and its production. He cited the move by the Tamil Nadu government to close the state owned TANTEA-TamilNadu Tea Plantation Corporation- by gradually reducing the workforce and not developing the plantations. "My relatives in Sri Lanka such a move is happening in Sri Lanka and the estate owners are colluding with the government there to gradually close down plantations - in particular the smaller ones".

Pointing to the plight of the Sri Lankan refugees living in various camps in Tamil Nadu, Selvaraja says most of them lodged there are IOT persons who relocated to the war zone in search of employment and due to various natural disasters at various points of time. "They live on the doles given by the government which is not sufficient".

A joint action committee to work for internationalizing the plantation community Tamils issue was formed at the meeting with Mano Ganesan as it Hon. President.



# இலண்டனில் பரதகலாலயத்தின் நடன மாலை













ஐக்கிய இராச்சியத்தில் பரத கலாலயம் நாட்டியப் பள்ளியினரால் 08/07/23 அன்று மாலை சுரளைடனி வின்ஸ்டன் சேர்ச்சில் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட நாட்டிய மற்றும் இசை நிகழ்ச்சி பற்றிய குறிப்பொன்றை வரைவது இக்காலத்தின் தேவை என்றால் அது மிகையாகாது.

இந் நாட்டியப் பள்ளி பரத கலா வித்தகர் திருமதி விஜயகுமாரி ஐங்கரன் அவர்களால் கிட்டத்தட்ட முப்பதாண்டுகளாக புலம்பெயர் மண்ணில் நடாத்தப்பட்டு வருகின்றது. அதேபோல் இசை நிகழ்ச்சிகளால் இவ் விழாவுக்கு ஆதரவும் ஊக்கமும் தந்த ஆசிரியை சுகிர்தகலா கடாட்சம் அவர்களும் புலம் பெயர் தேசத்தில் ஈழ மண்ணின் கலை, கலாச்சார விழுமியங்களை இளைய தலைமுறை பற்றிப் பிடிக்க அருந் தொண்டாற்றி வருபவர்.

இந்நிகழ்ச்சியில் இளம் நடனக் கலைஞர்களிலிருந்து நடனம் கற்று பட்டம் பெற்றுப் பிரகாசிக்கும் நர்த்தகிகள் வரை கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குழந்தைகள் முதல் வேலை பார்க்கும் இளம் பெண்கள் வரை திறம்படச் சபையோர் வியக்கும்படி விறு விறுப்பாக ஆடி நடன விருந்தளித்தார்கள். அனைத்து மாணவிகளினதும் அரைமண்டி அங்க அசைவு முகபாவம் அழுத்தம் எவற்றிலும் எந்தவித குறையும் இல்லாதவாறு ஆசிரியை பயிற்சியளித்திருந்தார். மாணவிகளும் நடனத்துடன் ஒன்றி லயித்து ஆடினார்கள் ஆடலுக்கான பாடல் தெரிவு ஆடைத் தெரிவு மிகவும் அருமை என்று சொன்னால் அது மிகையாகாது.

நடன அமைப்பும் நட்டுவாங்கமும் ஆசிரியையின் ஆளுமையை வெளிப்படுத்தியது.முழு நிகழ்ச்சிக்கும் முத்தாய்ப்பு வைத்தால்போல் மயில்நீல வர்ண உடையில் மயில் நடனம் அமைந்திருந்தது. அரங்கேற்றம் செய்த சிரேஷ்ட மாணவிகள் வேலைப் பளுவுடனும் அதிக அக்கறை செலுத்தி அம்மயில நடனம் ஆடியிருநதார்கள். மயிலைப் போன்றே ஒயிலும் கழுத்தசைவுகளும் சபையோரைக் கவர்ந்திருக்க வேண்டும் பலத்த கரகோ'ம் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

இசை நிகழ்ச்சிகளும் சிறுமியரின் விநாயக
வணக்கத்தில் ஆரம்பித்து தாய் மண்ணின் அழகு பாடி இசை மாருதமாக வியாபித்து அரங்கு நிறைந்திருந்த சபையோர்களை ஆகர்சித்து மகிழ்வித்தது.

நாட்டிய மற்றும் இசையாசிரியர்களின் மாணவர்களின் பெற்றோர் தங்கள் பொன்னான நேரத்தை ஒதுக்கி ஒத்துழைத்ததோடன்றி சிற்றுண்டிகள் மற்றும் குடிபானங்களை வழங்கியதோடன்றி தாங்களே உபசரிப்பிலும் தங்கள் உழைப்பை வழங்கினர்.

இத்தகைய கூட்டு நடவடிக்கையின் விளைவாக £ 800 ratnam foundation இயக்குநர் கலாநிதி நித்தியானந்தன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.



# முதலாம் ஆண்டு நினைவாஞ்சலி



அன்பின் இலக்கணமாம் எம் அன்னை
அமைதியின் உருவமும் நீயானாய்
அடக்கத்தின் இருப்பிடமாய்
பண்பினில் பெருந்தகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
கொடைகளில் வள்ளலாய்
குலவிளக்கே எம் தாயே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிராத்திக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



## திருமதி. இராஜேஸ்வரி கந்தையா

அன்னை மடியில்: **09-03-1938**
இறைவன் அடியில்: **07-14-2022**

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(416) 834-3568

---

ஓம் சக்தி

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம்

**கனடாவின் தாய் மன்றம் — வழிபாட்டு மன்றம் (எண் 3181)**
80(E) Nashdene Rd. Unit #99, Scarborough, Tel: 647.436.9647

# ஆடிப்பூர பெருவிழா



21-07-2023 வெள்ளிக்கிழமை அன்று ஆடிப்பூர பூஜை நடைபெறும்.

23-07-2023 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆடிப்பூர ருதுசாந்தி சிறப்பு பூஜை காலை 8:00 மணி தொடக்கம் நடைபெறும்.

அத்துடன் ஆடிச்செவ்வாய் மாலை 5:30 மணிக்கு சிறப்பு பூஜை நடைபெறும்.

கஞ்சி கலசம் எடுக்கும் சக்திகள் முன்கூட்டியே தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். அத்துடன் அன்னைக்கு வேப்பிலை, தேசிக்காய், பழங்கள், பூப் போன்றவையும் அன்பளிக்கலாம்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெற்றுய்யமாறு வேண்டுகின்றோம்.

# சர்வதேசத்தில் ஈடுபாடின்றி கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது

- நடராசா லோகதயாளன்



**கொ**க்குத்தொடுவாய் புதைகுழி தோண்டப்படுவது தொடர்பில் எதிர் வரும் வியாழக்கிழமை (20) மீண்டும் ஒரு கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாயில் காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியில் குறைந்தது 13 மனித உடல்களின் பகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அங்கு அகழ்வுகளை அடுத்தகட்டமாக எப்படி முன்னெடுத்துச் செல்லுவது என்பதை ஆராய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி டி பிரதீபன் தலைமையில் நேற்று (13) நடைபெற்ற கூட்டத்தில், அவ்விடத்தில் அகழ்வுப்பணிகள் தொல்லியல் திணைக்களத்தின் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் சட்ட வைத்திய அதிகாரி, தொல்லியல்த் திணைக்கள அதகாரிகள், பொலிசார், சட்டத்தரணிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் அடுத்தக்கட்ட அகழ்வின் போது, தொல்லியல் திணைக்களத்துடன் சட்ட வைத்திய அதிகாரிகள் குழாம் இணைந்து செயல்படுவார்கள் என்றும், இதில் தொடர்புடைய இதர திணைக்களங்களின் வளங்கள், தேவைப்படும் நிதியாதாரங்கள் குறித்து அடுத்த கூட்டத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் முடிவானது.



அந்த மனிதப் புதைகுழி கணப்படும் இடத்தில் தேவையற்ற வகையில் அதிக புலனாய்வாளர்கள் நடமாடுவது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதேநேரம் இனி வரும் காலத்தில் இடம்பெறும் அகழ்வுப் பணியின் போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தொல்லியல் மாணவர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டது.

அடுத்தகட்ட அகழ்வுப் பணிகளின்போது சர்வதேசப் பிரதிநிதிகள் பிரசன்னம் அவசியமானது என சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.

இவற்றை ஆராய்ந்த நீதிபதி "புலனாய்வாளர்களில் தேவையானோர் தவிர்ந்த ஏனையோரின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும். அதேநேரம் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்களை அனுமதிக்க முடியாது அதற்குப் பதிலாக தொல்லியல் பீடத்துறையின் அனுப அதிபாரிபனை இணைக்க முடியும். இதேநேரம் சர்வதேசப் பிரதிநிதிகளை நாம் நேரில் அழைக்க முடியாது. ஆனால் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாமாக வந்தால் தடுக்கப்பட மாட்டார்கள்" என நீதபதி பதிலளித்தார்.

ஆனால், காணாமல் போனவர்களை தேடி அலையும் உறவுகளும், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளும் உள்ளூர் பொறிமுறைகளில் நம்பிக்கை இல்லை, சரவதேசத்தின் ஈடுபாட்டுடன் இந்த அகழ்வுகள் நடைபெற வேண்டும், அப்போது தான் அது பாரபட்சமின்றி நேர்மையாக நடைபெறும் என்று கருத்துரைத்தனர்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் 29.06.2023 அன்று விடுதலைப் புலிகளின் சீருடையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற சீருடைகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பிலான அகழ்வு பணிகள் கடந்த இம்மாதம் 6ஆம் திகதி அடையாளம் காணப்பட்டன. அதற்கு சரியக ஒரு வாரம் முன்னதாக கொக்குத்தொடுவாய் - கொக்கிளாய் பாதையில் நீர் வழங்கலிற்கான குழாய்கள் பதிக்கப்படுவதற்காக தோண்டப்பட்ட சமயம் மனித எச்சங்கள் காணபட்டத்தை அடுத்து, அது உள்ளூர் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

பிறகு அடுத்த வியாழக்கிழமை ஜுலை 6 ஆம் திகதி அவ்விடம் தோண்டப்படும் போது மேலும் பல உடல் பகுதிகள், உடைகள், வேறு சில பொருட்கள் ஆகியவை காணப்பட்டன. அவை ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் முன்னிலையில் குறிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கபடுவதற்கான முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடுத்தகட்ட அகழ்வு குறித்த பணிகள் தொடர்பிலான உரையாடல் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, அனைத்து திணைக்களங்கள் மற்றும் சட்டத்தரணிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், மதகுருமார்கள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் உட்பட பல்துறையினர் பங்குபெற்றனர்.



முல்லைத்தீவு நீதிமன்ற கட்டடத்தொகுதியில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி த. பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவா, யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் செல்லையா பிரணவன், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள், காணாமல் போனோர் அலுவலகத்தின் (ஓ எம் பி ) சிரேஸ்ட சட்டத்தரணி ஜெகநாதன் தர்ப்பரன், பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன், சட்டத்தரணிகளான கேசவன் சயந்தன், வி.எஸ்.எஸ்.தனஞ்சயன், ருஜிக்கா நித்தியானந்தராஜா உள்ளிட்ட சட்டத்தரணிகள் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணிகளான றணித்தா ஞானராஜா, வி.கே நிறஞ்சன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், அளம்பில் பங்குத்தந்தை யூட் அமலதாஸ், நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையாக மக்கள் பேரியக்கத்தின் இணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் முன்னதாக நீதிபதி அவர்களால் சட்ட வைத்திய அதிகாரியிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டது. இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவா, யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் செல்லையா பிரணவன், யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் உருத்திரபசுபதி மயூரதன் ஆகிய மூவர் கொண்ட குழாம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவா தலைமையில் குறித்த பணியை முன்னெடுக்கும் எனவும் இதில் அகழ்வு பணிகளை முன்னெடுக்க தொல்லியல் திணைக்களத்தினரை



உள்வாங்க வேண்டும் எனவும் அவர்களே அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த பகுதியில் மழைக்காலத்துக்கு முன்னதாக அகழ்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறித்த அகழ்வுப்பணிக்கான நிதி ஏற்பாடுகள் செய்யவேண்டும் எனவும் நீதிபதி தெரிவித்தார்.

சுமார் இரண்டு மணித்தியாலங்களாக பல்வேறு தரப்புக்களின் கருத்துக்களை தொடர்ந்து எதிர்வரும் வியாழக்கிழமை (20.07.2023) அன்று சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டவைத்திய அதிகாரிகளின் அகழ்வு நடவடிக்கைகள், நிதி தொடர்பான விடயம் ஓ எம் பி அலுவலகம் ஊடாக நிதியை பெற்றுக்கொள்ளல், விரைவாக அகழ்வு பணிகளை மேற்கொள்ளவேண்டும், சான்றுப்பொருட்களை பாதுகாக்கும் பொறிமுறை, புதைகுழி காணப்படும் காணி தொடர்பில் நில அளவை திணைக்களத்தின் வரைபடங்கள், தொல்லியல் திணைக்களத்தின் அகழ்வு பணி தொடர்பான விடயங்கள், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரால் குறித்த காணி-சுதந்திரத்தின் பின்னர் யார் யாரின் ஆளுகையில் இருந்தது என்பது தொடர்பான விடயம், தற்போதுள்ள பாதுகாப்பை அதிகரித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தொடர்பில் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அன்றைய தினம் (20) அகழ்வு பணி தொடர்பில் தீர்மானிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி. கே. நிறஞ்சன் அவர்கள் சர்வதேச நியமங்களை பின்பற்றியும் வைத்தியர்களுக்காக தயாரிக்கப்பட்ட கோவையின் அடிப்படையிலும் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று இடம்பெற்ற மனித புதைகுழி தொடர்பான விசேட கலந்துரையாடலில் சட்ட வைத்திய அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர்.

இதன்போது, அழைக்கப்பட்ட நிறுவன பிரதிநிதிகளும் வைத்தியர்களாக வைத்தியர் வாசுதேவ மற்றும் பிரணவன் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தார்கள்.

அவர்கள் இந்தப் புதைவழி எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஒட்டுமொத்த நபர்களின் கலந்துரையாடலின் அடிப்படையில், சர்வதேச நியமங்களை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கருத்துரைக்கப்பட்ட நிலையில், ஏற்கனவே வைத்தியர்களுக்கு அவர்களுடைய தயாரிக்கப்பட்ட கோவை ஒன்று காணப்படுவதாக கூறி அதற்கு அமைவாக இந்த அகழ்வை மேற்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரம் எவ்வாறு இந்த மனித புதைகுழி அகழ்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என நீதிமன்றத்தால் பல கட்டளைகள், அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், அரசியல்வாதிகள் மற்றும் பல நிறுவனங்களைச் சார்ந்தோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்த நிறுவனங்களின் அறிக்கைகளுக்காக தொல்பொருள்திணைக்களத்தின் அறிக்கைக்காகவும் இந்த வழக்கு அடுத்த வியாழக்கிழமை மீண்டும் அழைக்கப்பட இருக்கிறது என தெரிவித்தார்

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

றொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரம்மோத்ஸவ விஞ்ஞாபனம்

## 16.07.2023 ஞாயிறு முதல் 30.07.2023 ஞாயிறு வரை

**14.07.2023 வெள்ளிக்கிழமை - சமயதீட்சை**
காலை 7:35 மணி முதல் அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**14.07.2023 வெள்ளிக்கிழமை - மாலை**
விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.

**15.07.2021 சனிக்கிழமை**
மாலை கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம் என்பன நடைபெறும்.

**16.07.2023 ஞாயிற்றுக்கிழமை - கொடியேற்றம்**
காலை 7:00 மணி முதல் அங்குரார்ப்பண பூஜைகள் நடைபெற்று
காலை 9:30 மணிக்கு வசந்தமண்டபபூஜையும்,
**11:00மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும்.**

**காலை**

| | |
|---|---|
| 7:00 மணிமுதல் | காலைப்பூஜை, |
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, ஸ்நபனாபிஷேகம் |
| 9:30 மணிக்கு | விசேடபூஜை |
| 10:00 மணிக்கு | யாகபூஜை, ஸ்தம்பபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டபபூஜை, சுவாமி வீதிவலம் வருதல் |
| 12:30 மணிக்கு | விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல். |

**மாலை**

| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 5:30 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 6:00 மணிக்கு | யாகபூஜை, ஸ்தம்பபூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டபபூஜை சுவாமி வீதிவலம் வருதல் |
| 9:45 மணிக்கு | விபூதி பிரசாதம் வழங்கல், அர்த்த ஜாமப் பூஜை |


கொடியேற்றம்


ஓங்கார வடிவக் காட்சி


மயூரகணபதி வடிவம்


சூரியப் பிரபைக் காட்சி


வித்யாகணபதி வடிவம்


நர்த்தனகணபதி வடிவம்

**16.07.2023 ஞாயிறு – 1ம் நாள்**
**ஓங்கார கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**17.07.2023 திங்கள் – 2ம் நாள்**
**மயூர கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**18.07.2023 செவ்வாய் – 3ம் நாள்**
**சூரியப்பிரபை வடிவக் காட்சி**
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**19.07.2023 புதன் – 4ம் நாள்**
**வித்யா கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் வீணை ஆராதனை

**20.07.2023 வியாழன் – 5ம் நாள்**
**அனந்தசயன வடிவக் காட்சி**
அந்தணர்களின் வேதபாராயணம்

**21.07.2023 வெள்ளி – 6ம் நாள்**
**சிவலிங்கபூஜை வடிவக் காட்சி**
கைலாச வாகனத்தில் வெளி வீதியுலா

**22.07.2023 சனி – 7ம் நாள்**
**நர்த்தன கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**23.07.2023 ஞாயிறு – 8ம் நாள்**
**கப்பல் திருவிழா**
கப்பல் வடிவ வாகனத்தில் வெளி வீதியுலா

**24.07.2023 திங்கள் – 9ம் நாள்**
**சங்கீத கணபதி வடிவக் காட்சி**
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**25.07.2023 செவ்வாய் – 10ம் நாள்**
**மஞ்சத் திருவிழா**
அழகிய மஞ்சத்தில் வெளி வீதியுலா

**26.07.2023 புதன் – 11ம் நாள்**
**நம்பியாண்டார் நம்பி திருமுறை உற்சவம்**
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**27.07.2023 வியாழன் – 12ம் நாள்**
**மாம்பழத் திருவிழா**
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்

**28.07.2021 வெள்ளி – 13ம் நாள்**
**சப்பறத் திருவிழா**
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு வெளி வீதியுலா

**29.07.2023 சனி – 14ம் நாள்**
**தேர்த் திருவிழா** காலை: ரதாரோகணம்.
மதியம்: ரத அவரோகணம் (பச்சை சாத்துதல்)

**30.07.2023 ஞாயிறு – 15ம் நாள்**
**தீர்த்தத் திருவிழா**
காலை: தீர்த்தோற்சவம், யாககும்ப அபிஷேகம்
மாலை: திருவூஞ்சல், துவஜ அவரோகணம்.

**31.07.2023 திங்கள்**
**பூங்காவனம்**
சங்கீத இசை நிகழ்ச்சி

**01.08.2023 செவ்வாய்**
**வைரவர் மடை**
காலை: பிராயச்சித்த அபிஷேகம், மாலை: வைரவர் மடை



கைலாச வாகனம்


அனந்தசயனக் காட்சி


மஞ்சத் திருவிழா


சங்கீத கணபதி வடிவம்


சப்பறத் திருவிழா


தேர்த் திருவிழா

திருவிழாக் காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் இம் மகோற்சவப் பெருவிழாவில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா**
21.07.2023 வெள்ளிக்கிழமை

**ஆடி அமாவாசை விரதம்**
(பிதிர்தர்ப்பணம்)
15.08.2023 செவ்வாய்க்கிழமை

**வரலட்சுமி விரதம்**
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
25.08.2023 வெள்ளிக்கிழமை


நம்பியாண்டார் நம்பி உற்சவம்


கப்பல் திருவிழா

## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்


தீர்த்தத் திருவிழா


மாம்பழத் திருவிழா

1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

In the case of Carey v. The Commonwealth, the Court did hold that a public servant did have the right to sue for earned remuneration. But the only precedent relied upon by the Judge in Carey's case in support of this alleged right was the decision in William s v. Howarth. The report of this latter case, however, shows that the plea was never taken in argument that the Crown could not be sued for wages. The plea if taken would undoubtedly have succeeded, for the suit was one for wages claimed by a member of the Armed Forces of Australia who had served with the British Imperial Forces in South Africa. The only question (1 SO Comm. L. R. 132. 2 (1905) A. C. 551.) decided was whether payments made by the Imperial Government should be taken into account in determining whether the plaintiff had received the wages payable to him by the Australian Government. The case should not, J think with respect, have been regarded as authority for the proposition that a military or civil servant of the Crown had a right to sue for earned wages.

The case of Lucy. The Commonwealth was much relied on by Counsel for the plaintiff in support of the alleged right to sue the Crown on a contract of employment. The plaintiff in that case had until March 1901held office in the Postal Department of South Australia. At that stage the Department was taken over by the Commonwealth and the plaintiff was then transferred to the Commonwealth Public Service. In 1919 the plaintiff was notified that he would be retired from the Commonwealth Public Service upon attaining the age of 65 years, and in May 1919 he was actually so retired. The plaintiff claimed that under a South Australian Act of 1874 he had acquired a right to retain office until death or removal in terms of that Act and that he had been wrongfully retired at the age of 65 years. Section 60 of the Commonwealth Public Service Act provided that an officer transferred to that Service will retain all the existing and accruing rights which he had previously as a member of the South Australian Service, and it had been held in an earlier case that this Section (despite inconsistent provision in section 74 of the Act) preserved to such an officer the right to remain in service after attaining the age of 65 years.

In these circumstances the plaintiff claimed (a) a declaration that he had been wrongfully removed from service on 11th March 1919, (b) a declaration that he was entitled to retain office until his death or until his office was determined in accordance with the South Australian Act of 1874, and (c) damages for wrongful removal or dismissal. A case stated for the opinion of the High Court, after setting out the relevant facts, submitted the question "whether the damages to which the plaintiff is entitled should be measured and ascertained by any one or more of the following considerations", and thereafter invited the Court to determine whether or not certain specified matters should be taken into account in the assessment of damages.

Despite references in the judgments to the contract which the plaintiff had as a member of the Public Service, it seems to me that the question whether a public servant had a right to sue the Crown for his wages was not in fact disputed in this case, for, as I have just stated, the Court was only invited to lay down the measure of damages as for a dismissal from service which was admitted to be unlawful. Indeed the note of the argument of the Counsel for the plaintiff contains this passage :—" the dismissal of the plaintiff was a breach of his statutory right and not a breach of contract; whichever it is, if the plaintiff's remedy is damages, measure is the same I must refer however to an observation in the judgment of Higgins J. that " this position would be beyond question in a case of ordinary contract between employer and employee ; and in my opinion the relation between the Commonwealth and the officer is a relation of contract (cf. William s v. Howarth) Higgins J. was the same Judge who had decided the earlier case of Carey, and I have already stated my opinion that he had wrongly relied on the decision in Williams v . Howarth.

It seems to me that Lucy 's case is not substantially different in principle from that of Rangachari decided by the Privy Council in 1937. In each case the plaintiff had a right of action because he had been dismissed in breach of statutory provision, and not because he was entitled to contractual rights.

The nature of service under the Crown in Canada was considered in the judgment of the Privy Council in the case of Reilly v. the K in g 1. The suppliant had in 1928 been appointed a member of the Federal Pension Appeal Board for a period of five years. In May 1930 the pension statutes were amended and in consequence the Pension Appeal Board was abolished, and a new Tribunal established in its place. Mr. Reilly was not appointed to the new Tribunal, and in October 1930 he was requested to vacate the premises which he had occupied in pursuance of his office, The following observations of Lord Atkin are important for present purposes: —

"Both Courts in Canada have decided that by reason of the statutory abolition of the office Mr. Reilly was not entitled to any remedy, but apparently on different grounds. Maclean J. concluded that the relation between the holder of a public office and the Crown was not contractual. There never had been a contract: and the foundation of the petition failed. Orde J.'s judgment in the Supreme Court seems to admit that the relation might be at any rate partly contractual; but he holds that any such contract must be subject to the necessary term that the Crown could dismiss at pleasure. If so, there could have been no breach.

Then Lordships are not prepared to accede to this view of the contract, if contract there be. If the terms of the appointment definitely prescribe a term and expressly provide for a power to determine 'for cause' it appears necessarily to follow that any implication of a power to dismiss at pleasure is excluded. This appears to follow from the reasoning of the Board in Gould v. Stuart. That was not the case of a public office, but in this connection the distinction between an office and other service is immaterial. The contrary view to that here expressed would defeat the security given to numerous servants of the Crown in judicial and quasi-judicial and other offices throughout the Empire, where one of the terms of their appointment has been expressed to be dismissal for cause. (1 (19U) A. G. 176. H. N. G. FERNANDO, C.J.— The Attorney-General v. Kodeeswaran 135 1 (19U) A. G. 176.)

In this particular case their Lordships do not find it necessary to express a final opinion on the theory accepted in the Exchequer Court that the relations between the Crown and the holder of a public office are in no degree constituted by contract. They content themselves with remarking that in some offices at least it is difficult to negative some contractual relations, whether it be as to salary or terms of employment, on the one hand, and duty to serve faithfully and with reasonable care and skill on the other. And in this connection, it will be important to bear in mind that a power to determine a contract at will is not inconsistent with the existence of a contract until so determined."

The dicta of Lord Atkin in Reilly 's case received careful examination by the Supreme Court of South Africa in the case of Sachs v. Donges1 in which it was sought to equate the case of the revocation of a passport to the Crown's right to terminate at pleasure the employment of a public officer. Referring to Lord Atkin's statement that " if the terms of the appointment definitely prescribe a term, and expressly provide for power to determine for ' cause ', it appears necessarily to follow that any implication of a power to dismiss at pleasure is excluded ", two Judges of the South African Court thought it clear that Lord Atkin only contemplated cases of appointments under a statutory power, where the statute itself by implication excluded the prerogative right of dismissal at pleasure.

Van den Heever, J.A. said in this connection: — "Once it is established that an act is the exercise of discretionary executive power not regulated by statute cadit quaestio, ......... the subject's redress, if any, is political, not judicial." Centlivres J. expressed his disagreement with the construction placed on Lord Atkin's dictum in the case of Robertson v. Minister of Pensions 2 where Lord Denning had stated that "in regard to contracts of service, the Crown is bound by its express promises as much as any subject". Let me with great respect state my own reasons for disagreeing with that construction.

In the passage cited above, Lord Atkin first referred to a judgment in which Orde J. in the Canadian Supreme Court, seemed "to admit that the relation might be at any rate partly contractual; but he holds that any such contract must be subject to the necessary term that the Crown could dismiss at pleasure". Lord Atkin then expressed inability to accede to this view of the contract, if contract there be. His subsequent statement, that, in certain cases, " any implication of a power to dismiss at pleasure is excluded ", is explained by his reference to the cases of " numerous servants of the Crown in judicial and quasi-judicial and other offices throughout the Empire, where one of the terms of their appointment has been expressed to be dismissal for cause ", This reference read together with the reference to Gould v. Stuart 3, indicate that Lord Atkin had in mind only cases in which the power to dismiss at pleasure (1 (1950) (2) S . A. L. R. 265. 1 (1948) 2 A. E. R. 767. (1896) A. C. 575. 136 H. N. G. FERNANDO, C.J.— The Attorney-General v. Kodeeswaran) becomes excluded by contrary provision in a statutory power of appointment. (To be continued)



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கைக்கு அதிக வருமானம் ஈட்டித்தரக்கூடிய சுற்றுலாத்துறை தொடர்பான 6 மாத பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு சான்றிதழ்

இலங்கைக்கு அதிக வருமானம் ஈட்டித்தரக்கூடிய துறையாக சுற்றுலாத்துறை அமைந்திருந்தும், வடக்கு மாகாணத்தில் இது போதியளவுக்கு வளர்த்தெடுக்கப்படவில்லை என்ற விடயத்தினை வலியுறுத்தி, வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயண வழிகாட்டிகளுக்கான 6 மாத பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு, யாழ். கோட்டை உட்பகுதியில் சான்றிதழ் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

நிகழ்வானது வடமாகாண சுற்றுலா குழுவின் முகாமைத்துவ தலைவர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. பத்திநாதன் தலைமையில் இடம்பெற்றது..

அவருக்கு உறுதுணையாக இருந்து வடக்கு மாகாண சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் வடக்கு மாகாண சுற்றுலா பயணத்துறை பணியகத்தின் முகாமைத்துவச் சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனவிரத்ன, giz நிறுவன திட்ட முகாமையாளர் குமுதினி றோசா ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் சுற்றுலா முகாமைத்துவக் கற்கை முயற்சிகளை முன்னெடுத்துவரும் பேராசிரியர் சிவேசன், வடக்கு மாகாண



சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் ஸ்தாபக தலைவரும் யாழ். பாடி விடுதியின் உரிமையாளருமான சுந்தரேசன், சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் செயலாளரும், My Pizza நிறுவன உரிமையாளருமான கார்த்திகன், யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகம் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சான்றிதழ் பெற்ற இளைஞர்களை வாழ்த்தி ஊக்குவித்தனர்.

# யாழ்ப்பாண தீவக வலயத்தில் மாணவி மீது அதிபர் தாக்குதல் – மறைப்பதற்கு முயற்சி



தீவக வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 4ல் கல்வி கற்கும் பெண் மாணவி மீது பாடசாலை அதிபர் தடிகளால் முதுகில் தாக்கியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றையதினம் புதன்கிழமை பாடசாலையில் இடம்பெற்றதாக அறியக் கிடைக்கும் நிலையில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் குறித்த சம்பவத்தை வெளியில் சொல்லக்கூடாது என அச்சுறுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் வேலணை பிரதேச செயலரை தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த சம்பவம் தொடர்பில் தமது உத்தியோகத்தர்களுக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றதாக தெரிவித்தார்.

# வடமாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டம்



தமக்கான நிரந்தர நியமனத்தை விரைந்து வழங்குமாறு வலியுறுத்தி வடமாகாண டெங்கு களத் தடுப்பு உதவியாளர்கள் வி யா ழ க் கி ழ மை (13.07.2023) நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 02.15 மணி வரை யாழ். பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிமனைக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திடீரென ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள், "அரசே டெங்கு கள உதவியாளர்களை நிரந்தரமாக்கு, 22,000 ரூபா ஊதியம் எமது வாழ்வாதாரத்திற்குப் போதுமா?, வேண்டும் வேண்டும் எமக்கான நிரந்தர நியமனம் வேண்டும்" உள்ளிட்ட பல சுலோகங்களைத் தமது கைகளில் ஏந்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி நாடு தழுவிய ரீதியில் டெங்கு களத் தடுப்பு உதவியாளர்கள் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தொடர் பணிப் பகி'கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வடமாகாணத்திலும் புதன்கிழமை (12.07.2023) முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படாத 82 டெங்கு களத் தடுப்பு உதவியாளர்கள் தொடர் பணிப் பகி'கரிப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாகவே குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளதுடன் வெள்ளிக்கிழமை (14.07.2023) காலை சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக வடமாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, மேற்படி போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகாரிகளைச் சந்தித்து வடமாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் சங்க நிர்வாகிகள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரினைக் கையளித்திருந்ததுடன் தற்போதைய வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி. த. சத்தியமூர்த்தி போராட்ட நிறைவில் வடமாகாண டெங்கு களத்தடுப்பு உதவியாளர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். இதுதொடர்பில் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

# பலாலி அன்ரனிபுரத்தில் மாணவிகளுடன் அங்க சேட்டைவிட்டவருக்கு விளக்கமறியல்

பலாலி - அன்ரனிபுரம் பகுதியில் மாணவிகளுடன் அங்க சேட்டையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் இருபதாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாக நீதவான் ந வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, பலாலி அன்ரனிபுரத்தில் கிறிஸ்தவ மத அமைப்பினரால் தனியார் முன்பள்ளி நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் அதில் முகாமையாளராக கடமையாற்றிய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீண்ட காலமாக இரு மாணவிகளுடன் அங்க சேட்டையில் ஈடுபட்டு வந்ததாகவும் தொடர்ச்சியாக அவரது செயற்பாடுகள் அதிகரித்த நிலையில் மாணவிகள் பெற்றோருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த சம்பவத்தை அறிந்து கொண்ட தனியார் கல்வி நிலைய நிர்வாகம் அதனை மறைப்பதற்கு பல முயற்சிகள் எடுத்த நிலையில் கொழும்பு சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிசார் குறித்த நபரை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாக நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனையில் பல நூறு ஏக்கரில் இம் முறையில் வெங்காய செய்கை



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அம்பன் மற்றும் குடத்தனை பகுதியல் இம்முறையும் பல நூறு ஏக்கரில் வெங்காய செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வருடாந்தம் ஆனி, ஆடி மாதத்தில் இடம்பெறும் குறித்த வெங்காய பயிர் செய்கை வளமையை விட இம்முறை அதிகமாக இடம்பெற்று வருகிறது.

அம்பன், குடத்தனை, மட்டுமின்றி பருத்தித்துறை மந்திகை தம்பசிட்டி உட்பட்ட பல கிராம விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் அம்பன் குடத்தனை வெங்காயத்திற்கா கேள்வி, மற்றும் விலை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம். திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகையின் கொடியேற்ற திருவிழா

யாழ். திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகையின் துவஜாரோஹணம் கொடியேற்றத்திருவிழா தேவஸ்தானத்தில் பக்திபூர்வமாக நடைபெற்றது.

ஆரம்பமாகிய மஹாவோற்சவத்தில் எதிர்வரும் 21.07.2023 அன்று இரதோற்சவம் இடம்பெற்று, மறுநாள் தீர்த்த உற்சவம் இடம்பெற்று, மாலை கொடியேற்றத்துடன் இனிதே மஹோற்சவம் நிறைவடையும். இவ் மஹாற்சவத்தில் பல பாகங்களிலும் இருந்து வருகைதந்த பக்தர்கள் கலந்துகொண்டனர்.





# கடந்தவையும் கடப்பவையும் (62)

பள்ளிகளில் நிற்கும்போது விமானங்கள்
தள்ளிவிடும் பீப்பாக் குண்டுகட்கும்

வீதிகளில் போகும்போது விண்ணென்று
கூவிவரும் பீரங்கிக் குண்டுகட்கும் பயந்தங்கு - முன்பின்

தெரியாதோர் வீடுகளுள் புகுந்துகொள்ள - மிக
சிறிதான பதுங்குகுழியானாலும் ஒழிந்திருக்க

இடம் கொடுத்த உயர்ந்த மனிதர்கள் இருந்த
இடம் நாமெல்லாம் வாழ்ந்த இடம்

ஆபத்துக் காலங்களில் எத்தனை உதவிகள் - தனிப்பட்ட
கோபங்களைப் பார்ப்பதில்லை அந்நேரம்

காயத்திற்கு உதவிசெய்ய ஊர்கள் தோறும் - மனித
நேயத்தோடு முதலுதவிப் பயிற்சிகள் - இன்றுபோல்

கொள்ளை இல்லை கொலைகள் இல்லை - முன்னைய
வெள்ளை கறுப்பு என்ற பேதமும் இருக்கவில்லை - தஞ்சமென்று

ஓடிவருவோர்க்கு ஒன்று சேர்ந்து உதவினார்கள் - ஒன்றாய்
கூடியிருந்து பகிர்ந்துமே உண்டார்கள் - அன்று

மின்சாரம் இல்லை தொலைபேசித் தொடர்பும் இல்லை - கடுமையான
பொருளாதாரத் தடையும் இல்லாமல் இருந்ததில்லை

விரும்பிய உணவில்லை மருந்துகளும் தானில்லை
விவசாயமும் நல்லபடி நடக்கவில்லை

கைத்தொழிலும் இல்லை கைகளில் காசுகளோ
மெத்தப் பொருமளவில் இருப்பதற்கு வாய்ப்புமில்லை

தூர இடம் போவதற்கு வாகன வசதியில்லை - வல்லைவெளியில்
ஓரமாய்ப் போனாலும் குண்டுகட்காய் ஒதுங்குதற்கு இடமுமில்லை

வல்லைவெளியில் விமானம் தொல்லை கொடுக்காத
அல்லல் அறியா நாளொன்றும் நினைவிலில்லை - ஆனாலும்

ஆழமான அகழிகளால் சூழப்பட்ட உறுதியான - மிக
நீளமான கருங்கற் பாறைகளால் அமைக்கப்பட்ட

ஒல்லாந்தர் கட்டிய கோட்டையது - யாழ்ப்பாணத்து
அந்நிய ஆதிக்கத்தின் அடையாளச் சின்னமது

நூற்றி ஏழுநாட் போரின் பின் மாறியது கை - ஈழ
நாட்டில் அது தமிழர் பெருநாள் அன்று - ஆனால்

இன்று ......... ( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# ஸ்வர்லயா இசைக் கல்லூரியின் 10வது ஆண்டு விழா கடந்த வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது

ஸ்வர்லயா இசைக் கல்லூரியின் ஸ்தாபகரும் குருவுமாகிய ஸ்ரீமதி ஜெயகாந்தினி சம்பந்தனின் மாணவ மாணவிகள் தங்கள் கர்நாடக இசைத் திறன்களை மேடையில் சமர்ப்பித்த 10 வது ஆண்டு விழா கடந்த 7ம் திகதி வெள்ளிக்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றது.



தமிழிசைக் கலாமன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி ஆண்டு விழாவில் சிறப்புப் பேச்சாளராக தமிழகத்தின் பிரபல வீணை வித்துவான் சி ஆர் எஸ் மூர்த்தி அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்.

ஸ்வர்லயா இசைக் கல்லூரியின் மாணவ மாணவிகள் தாங்கள் குருவிடம் கற்ற இசையின் வித்துவங்களை மேடையில் நேர்த்தியாக சமர்ப்பித்தார்கள் என்றால் அது மிகையாகாது. அந்த மாணவர்களின் பாடல்களுக்கு பக்கவாத்தியம் வழங்குவதற்கு ஏனைய லய வாத்திய ஆசிரியர்கள் மற்றும் வயல- ின் வித்துவான்கள் ஆகியோருடைய மாணவ மாணவிகள் பக்கவாத்தியங்களை வாசித்து விழாவிற்கு மேலும் சிறப்புக்களைச் சேர்த்தனர்.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக ஸ்வர்லயா இசைக் கல்லூரியில் இசை பயிலும் மாணவ மாணவிகள் அன்னையர்கள் வழங்கிய தமிழிசைப் பாடல்கள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாந்தை மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்: பல்வேறு விடையங்கள் குறித்து ஆராய்வு



- மன்னார் நிருபர் (13-07-2023)

மாந்தை மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் அரவிந்த ராஜ் அவர்களின் நெறிப்படுத்துதலில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மாந்தை மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (13) காலை இடம்பெற்றது.

குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி, விவசாயம், கல்வி, சட்டவிரோத மண் அகழ்வு சம்பந்தமாகவும், அதிகரித்து வருகின்ற போதைப்பொருள் பாவனையை தடுப்பது சம்பந்தமாகவும், வாழ்வாதார உதவி திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு உள்ளிட்ட இன்னும் பல முக்கியமான விடயங்கள் பற்றி கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

இப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிட்டத்தக்கது.



# முல்லைத்தீவு கைவேலி பகுதியில் வனவள திணைக்கள அதிகாரிகள் அடாவடி: இருவர் வைத்தியசாலையில்



(13-07-2023)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் புதன்கிழமை (12) வனவள திணைக்கள அதிகாரிகள் முன்னாள் போராளி உள்ளிட்டவர்களின் வீடுகளை உடைத்தெறிந்து பெண்கள் மீதும் தாக்குதல் நடத்தியதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் 2000ம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் அமைப்பின் 45 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு குறித்த பகுதியில் 45 குடும்பங்கள் குடியேறி இருந்தனர். இந்நிலையில் 2009ம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தபோது குறித்த பகுதியை விட்டு மக்கள் சென்ற பின்னர் குறித்த பகுதியில் இருந்த குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

பலர் உயிரிழந்தும் வேறு சிலர் வேறு இடங்களில் குடியேறிவிட்டனர். இவ்வாறான நிலையில் குறித்த கிராம மக்கள் 2012ம் ஆண்டு கைவேலி பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது குறித்த பகுதியை வனவள திணைக்களம் எல்லைக் கற்கள் இட்டு வனப்பகுதியாக்கிவிட்டனர்.

இவ்வாறான பின்னணியில் மக்கள் வாழ்ந்த வீடுகள், கட்டு கிணறுகள், கட்டடங்கள், பயன்தரு மரங்கள் உள்ள குறித்த கைவேலி பகுதியில் காணிகள் வீடுகள் அற்ற சுமார் 20 குடும்பங்கள் பலகாலமாக குடியேறி வாழ முயற்சித்து வந்த நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் தமது குடும்பங்களை கொண்டு நடாத்த முடியாத நிலையிலும், வாடகை வீடுகளில் இருக்க முடியாத நிலையிலும் குறித்த 45 வீட்டுத்திட்டம் பகுதியில் சென்று கொட்டில்களை அமைத்து குடியேறியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மதியம் குறித்த பகுதிக்கு சென்ற வனவள திணைக்கள அதிகாரிகள் அங்கு மக்கள் போட்ட கொட்டில்களை அகற்றி கொழுத்துவதற்காக மண்ணெண்ணையுடன் வருகை தந்ததாகவும்

பெண்கள் தனிமையில் இருந்த கொட்டில்களில் சென்று முன்னாள் போராளியான பெண் ஒருவர் மீதும், ஆண் ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தியதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இருவரும் தற்போது புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வனவள திணைக்கள அதிகாரிகள் கொண்டு சென்ற மண்ணெண்ணையை பறித்து அங்கு இருந்த நபர் ஒருவர் தன் மீது ஊற்றி தீக்குளிக்க முற்பட்டு மக்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் சம்பவ இடத்திற்கு புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் போலிசார் சென்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அவர்களுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி குறித்த மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அத்தோடு குறித்த பகுதி கிராம அலுவலரும் அப்பகுதிக்கு வந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

இங்கு கருத்து தெரிவித்த மக்கள் புதுக்குடியிருப்பு பகுதியில் வசதி படைத்தவர்கள் பாரிய காடுகளை வெட்டி காணி பிடிக்கிறார்கள். காசை வாங்கி கொண்டு அவர்களை அங்கு விடுகிறார்கள்.

அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கிறார்கள் இல்லை எனவும், அப்பாவிகளான எங்களை மக்கள் வாழ்ந்த காணிகளில் வாழ அனுமதிக்கிறார்கள் இல்லை எனவும், தம்மால் வாடகை வீடுகளில் வாழ முடியாது எனவும், தமக்கு உரிய தீர்வை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதியில் திங்கட்கிழமையன்று (10) ஒன்பது பேர் வனவள திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்து பிணையில் விடப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஒருவர் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவரை நீதிமன்றில் வியாழக்கிழமை (13) முற்படுத்த வுள்ளதாக வனவள திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.



அத்தோடு, தமது கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக தெரிவித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் இரண்டு வனவள திணைக்கள அதிகாரிகள் முறைப்பாடு பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# "கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி" பொய்யான செய்தியை வெளியிட்ட இரு சிங்கள ஊடகங்கள்




(13-07-2023)

இலங்கையின் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் கண்டறியப்பட்ட மனித புதைகுழியானது, "தமிழீழ விடுதலைப் புலிகள அமைப்பின் சித்திரதை முகாம்" என, இலங்கையின் இரண்டு சிங்கள ஊடகங்கள் பொய்யான செய்தியை வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான தினமின பத்திரிகை மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு சார்பான தனியார் பத்திரிகையான திவயின ஆகிய இரு பத்திரிகைகளும் இந்த தவறான செய்தியை வெளியிட்டுள்ளன

குறித்த இரு பத்திரிகைகளிலும் ஒரே செய்தி இரு வேறு ஊடகவியலாளர்களின் பெயர்களில் வெளியாகியுள்ளது.

"புலிகளின் சித்திரவதை முகாமில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் உறுப்பினர்களின் உடல்கள் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது." என குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது, எனினும் அந்த இடத்தில் சித்திரவதை முகாம் ஒன்று காணப்பட்டதை இலங்கை அரசாங்கமோ, பாதுகாப்புத் தரப்போ அல்லது அரச அதிகாரிகளோ உறுதிப்படுத்தவில்லை.

மேலும், இந்த மனித உடல்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் போராளிகளின் உடல்களாக இருக்கலாம் என பொது மக்களும், அரசியல்வாதிகளும் சந்தேகம் வெளியிட்டுள்ளபோதிலும் இதுவரை அந்த உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

"கடந்த 8ஆம் திகதி மனித புதைகுழிகளை தோண்டியவர்களுக்கு சில வெடிபொருட்கள் மற்றும் குண்டுகள் கிடைத்ததாக" குறித்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும் கடந்த 6ஆம் திகதியே அகழ்வுப் பணிகள் இடம்பெற்றது என்பதோடு, வெடிபொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

"போரின் இறுதிக்கட்டத்தில் புலிகளின் சித்திரவதைக் கூடத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர்களின் உடல்களே புதைக்கப்பட்டுள்ளன என, தகவல் வெளியாகியுள்ள நிலையில், தமிழ் அரசியல்வாதிகள், இராணுவத்தினரால் கொல்லப்பட்ட புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் சடலங்கள் இந்த பாரிய புதைகுழியில் புதைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச சமூகத்திற்கு காட்ட பெரும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்." என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.




எவ்வாறாயினும், அகழ்வின் போது கிடைத்த விடயங்கள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அந்த எலும்புகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் உடல் பாகங்களாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டார்.

ஆனால் அவர் இலங்கை இராணுவத்தையோ அல்லது பாதுகாப்பு படையினரையோ குற்றம் சாட்டியிருக்கவில்லை.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி

## மனம் திறக்கிறார் மனோ கணேசன்

(கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 15)

# பொங்கு தமிழ்

• புலிகளின் மாவீரர் விழாவிற்கு சென்று, “ஆயுதம் தூக்குங்கள்” என நான் அறைக்கூவல் விடுத்து பேசியதாக ரூபவாஹினி செய்தி ஒளிபரப்பியது.
• “ஈழ நாட்டு தமிழ் மக்களே...! ஆயுதம் தூக்குங்கள்!” என்று சொன்னேனாம்.
• மேடையை விட்டு நான் இறங்கும் போது, படிக்கட்டருகே என்னை பார்த்து சிரித்தபடி அரசியல் துறை நண்பர் புலித்தேவனும், எம்பி நண்பர் கஜேந்திர குமாரும் நின்றனர்.
• அச்சந்தர்ப்பத்தில் விடுதலை புலிகள், அரசியல், ராணுவ பலத்தில் அதி உச்சத்தில் இருந்தார்கள். அங்கு நடந்தது தமிழ் ஈழத்தை நோக்கிய அவர்களது பயணத்தின் ஒரு அரசியல் நிகழ்வாகும்.
• “செய்யும் தப்பையும் தப்பில்லாமல் செய்ய தெரியாத அறிவுகெட்ட முட்டாள் நீ” என சமன் குமாரவை தொலைபேசியில் அழைத்து சொன்னேன்.

---

**2009 இறுதி யுத்தம் முடிந்து மகிந்த ராஜபக்ச 2010 ஜனாதிபதி தேர்தலுக்கு தயார் ஆகிய காலம். யுத்தத்தில் பெற்ற வெற்றியை மூலதனமாக வைத்து நாட்டில் பேரினவாத பேரிகை முழக்கிய காலம். 2004 போர் நிறுத்த காலத்தில் கிளிநொச்சி சென்று, நான் புலிகளின் அரசியல் பிரிவு நடத்திய பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துக்கொண்டு, ஆற்றிய ஒரு உரை காணொளியை, சமன்குமார ராமவிக்ரம என்ற ரூபவாஹினி யுத்த செய்தி ஊடகர், பிழை பிழையாக சிங்களத்தில் மொழிபெயர்க்க, விமல் வீரவன்ச நாடெங்கும் கூட்டங்களில் இன்னமும் திரித்து பேச, சிங்கள மக்களிடம் என்னை “தமிழ் பயங்கரவாதி” என சொல்லி, சொல்லி இவர்கள் பேரினவாத அரசியல் செய்த, காலம்**

---

நான் புலிகளின் மாவீரர் விழாவிற்கு சென்று, “ஆயுதம் தூக்குங்கள்” என்று அறைக்கூவல் விடுத்து பேசியதாகவும், “ஈழ நாட்டின் தமிழ் மக்களே!” என்று விளித்து “இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதத்தை கையில் ஏந்தி, எழுந்து வாருங்கள்.” என்று கூறியதாகவும், அரசாங்கத்தின் சுயாதீன மற்றும் ரூபவாஹினி தொலைக்காட்சி அலைவரிசைகளில் செய்தி, அன்றைய ராஜபக்ச ஆட்சி காலத்தில், திரும்ப, திரும்ப ஒளிபரப்பப்பட்டது.

அதை செய்தவர் யுத்தம் நடந்தபொழுது யுத்த அறிக்கைகளை சிங்கள மக்களுக்கு சுட சுட வழங்கி பிரபல்யமான சமன் குமார ராமவிக்ரம என்ற ஊடகவியலாளர் ஆகும்.

உண்மையில் நடந்தது என்ன? நான் பேசியது என்ன?

நான் போனது பொங்கு தமிழ் விழாவுக்கு ஆகும். பொங்கு தமிழ் என்பது மாவீரர் நிகழ்வு அல்ல. தென்னிலங்கையில் வேண்டுமென்றே இந்த இரண்டையும் போட்டு குழப்பிக்கொள்கிறார்கள்.

பொங்கு தமிழ், புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவால் நடத்தப்படும் அரசியல் நிகழ்வாகும்.

போர் நிறுத்த காலத்தில் சட்ட விரோதமற்ற அந்த விழாவிற்கு தென்னிலங்கையில் இருந்து பல அரசியல்வாதிகள் சென்று வந்தனர். ராஜபக்ச அரசாங்கத்தில் அப்போதும், அதற்கு பின்னரும் இருந்த அரசியல்வாதிகள் கூட புலிகளின் அரசியல் பிரிவுடன் தொடர்புகொண்டவர்கள்தான்.

எனவே கிளிநொச்சியில் நடைபெற்ற அந்த ஒரு பொங்கு தமிழ் விழாவில் நானும் கலந்துகொண்டேன். அதற்கு பிறகு ஒருமுறை கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் விழாவிலும் கலந்துகொள்ளுமாறு என்னை அழைத்திருந்தார்கள்.

சர்ச்சைக்குள்ளாகியது கிளிநொச்சி விழாவில் நான் ஆற்றிய உரையை சமன் குமார திரித்து சிங்களத்தில் தப்பு தப்பாக சொன்னதாகும்.

“ஈழ நாட்டு தமிழ் மக்களே...! ஆயுதம் தூக்குங்கள்! புலிகளை ஆதரியுங்கள். இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தூக்குங்கள்!” என்று நான் புலிகளின் மேடையில் ஏறி மாவீரர் நிகழ்வில் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆட்டி (கைகளை உயர்த்தி ஆட்டி பேசுவது எப்போதும் எனது பாணி. அதையும் ஒரு காரணமாக தென்னிலங்கை சிங்கள அரசியல் வாதிகள் பேசினார்கள்.!) பேசியதாக, சமன் குமார எனது தமிழ் பேச்சை திரையில் காட்டி பின்னணியில் சிங்களத்தில் கூறும் பொழுது சிங்கள மக்கள் மத்தியிலே சர்ச்சை ஏற்படுவது சகஜம் தான்.

ஆனால் இந்த “தப்பு” என்பதை தப்பில்லாமல் செய்வதற்கு இந்த சமன் குமாரவிற்கு “துப்பு” இருக்கவில்லை. ஏனெனில் எனது தமிழ் பேச்சை, மௌனித்து (Mute) முடக்காமல், நான் பேசும் என் காணொளியை ஓட விட்டு, பின்னணியில் அவர் சிங்களத்தில் (Voice Over) குரல் கொடுக்கிறார்.

உண்மையில் புலிகளின் பொங்கு தமிழ் மேடையில் ஏறி நான் என்ன பேசினேன்?

“இன்னமும் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ தயராக இருக்கின்றோம். இந்நாட்டிலே சிங்கள தேசியமும், தமிழ் தேசியமும் இணைந்து ஒரே வட்டத்திற்குள்ளே வாழ்வதற்கு இன்னமும் இடம் இருக்கின்றது. ஆனால் ஒரே நிபந்தனையாக இரண்டுக்கும் இடையில் சமத்துவம் நிலவ வேண்டும். எம்மை அரவணைத்துக்கொண்டு, சமத்துவமாக வாழ சிங்கள தேசம் தயாராக இல்லாவிட்டால் நாம் தனித்து, பிரிந்து செல்வோம், அதைத்தவிர வேறு வழியில்லை என்ற செய்தியைத்தான் இந்த நிகழ்வு உலகிற்கு சொல்கிறது என நான் நினைக்கிறேன்.”

இதுவே எனது பேச்சின் சாராம்சமாக இருந்தது. இதை இப்போதுகூட நான் பேசுவேனே.!

எனக்கு ஞாபகம் இருக்கின்றது. இதை பேசிவிட்டு மேடையை விட்டு நான் இறங்கும் போது, மேடை படிக்கட்டின் அண்மையில் என்னை பார்த்து சிரித்தபடி புலித்தேவன் நின்றுகொண்டிருந்தார். அவர் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவின் முக்கியஸ்தர்.

அவருடன் கூடவே அங்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், இன்றைய எம்பி நண்பர் கஜேந்திர குமார் பொன்னம்பலமும் நின்றார். இருவரும் உரையாடிக்கொண்டு இருந்தனர்.

இதற்கு முன்னரும் இரண்டு முறை புலித்தேவனை நான் சந்தித்திருக்கிறேன். அவர் எப்பொழுதும் என்னுடன் ஆங்கிலத்தில்தான் உரையாடுவார்.



"Why Annan, we are going on a Tamil National Journey, and you are talking about a United Journey with the Sinhalese" (“ஏன் அண்ணா, நாங்கள் தமிழ் தேசிய பயணத்தில் செல்கிறோம். நீங்கள் சிங்களவர்களுடன் இணைந்த பயணத்தை பற்றி பேசுகின்றீர்கள்?”) என்று என்னை பார்த்து சிரித்தபடி கேட்டார்.

நானும் சிரித்தபடி அவர் பக்கத்தில் போனேன். “நீங்கள் உங்கள் நிலைப்பாட்டை கூறுகின்றீர்கள், நான் எனது நிலைப்பாட்டை கூறினேன். ஆனால் ஒன்றாக இருப்பதானால் சமத்துவம் இருக்க வேண்டும் என்று கூறினேன் அல்லவா?” என்று கூறிவிட்டு அவரது தோளை தட்டிவிட்டு, கஜேந்திர குமாருக்கும் கையை காட்டிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றேன்.

கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக இருந்தார்.

உண்மையில் அச்சந்தர்ப்பத்தில் விடுதலை புலிகள், அரசியல், ராணுவ பலத்தில் அதி உச்சத்தில் இருந்தார்கள். அன்று அங்கு நடந்தது அவர்களது தமிழ் ஈழத்தை நோக்கிய பயணத்தின் ஒரு அரசியல் நிகழ்வாகும். கிளிநொச்சி அவர்களது தலைநகரம்.

அன்று, அங்கே, அந்த, அவர்களது மேடையில் ஏறி ஈழத்தை பற்றி பேசாமல் ஐக்கிய இலங்கையை பற்றி நான் மறைமுகமாக பேசி இருக்கின்றேன். அதுவும் தமிழில் பேசியிருக்கிறேன்.

என் பேச்சை புரிந்துகொள்ளக்கூடிய சிங்கள அரசியல்வாதிகள் இருப்பார்களேயானால், உண்மையிலேயே அவர்கள் எனக்கு தேச அபிமானி பட்டம் வழங்கி, இராமநாதனை வண்டியில் ஏற்றி இழுத்து சென்றதை போல, கௌரவப்படுத்தியிருக்க வேண்டும்.

இருப்பினும் இங்குள்ள இனவாத முட்டாள்கள் என்ன செய்கிறார்கள்? எனது பேச்சை திருவுபடுத்தி எனக்கு இனவாத சேறு பூசினார்கள்!

ஆனால், என் நிலைப்பாட்டையும், நான் அங்கு மேடையில் எதை பேச முடியும் என்பதையும் புரிந்துக்கொண்டு புலிகள் நாகரீகமாகவும், கௌரமாகவும் நடந்துக்கொண்டார்கள்.

ஒரு வேளை நான் தனி தமிழ் ஈழத்தை விரும்பாததை போல், அதற்கு பதிலாக இரு இனங்களுக்கிடையில் அரசியல் சமத்துவத்தை வலியுறுத்தாமலும் இருந்து, முழுமையாக சரணடைந்திருந்தால் என்னை பேரினவாதிகள் போற்றி புகழ்ந்திருக்கக்கூடும்.

ஆனால் என்னால் அப்படி நிபந்தனை இல்லாமல் சரணடைய முடியாது. அப்படியான நிலைப்பாடு எனக்கு இருந்திருந்தால் புலிகளும் அவர்கள் பொங்கு தமிழ் நிகழ்வுக்கு என்னை அழைத்திருக்க மாட்டார்களே?

உண்மையில் மேலே சொன்னதை போல, தப்பை தப்பில்லாமல் செய்வதற்கு அந்த சமன் குமார ராமவிக்ரம என்ற ஊடகவியலாளருக்கு முடியாமல் போனது.

நான் தமிழ் மொழியில் பேசியதன் ஒலியை மௌனித்து முடக்காமல் (mute) எனது பேச்சையும் காணொளியை பார்ப்பவர்கள் கேட்கும் படியாக ஓடவிட்டு அதன் பின்னணியில்தான் சமன் குமார எனது பேச்சை சிங்களத்தில் மொழிப்பெயர்ப்பதாக கூறி அபாண்டமாக மொழி பெயர்த்திருந்தார்.

உண்மையில் அங்கு ரூபவாஹிணியில் பணி செய்த யாரோ ஒரு செந்தமிழர் (இவரை யாரென தெரிந்தால் சொல்லுங்களேன்..) எனது தமிழ் பேச்சை சிங்களத்தில், சிங்களம் விரும்பும் வண்ணம் மொழி பெயர்த்து கொடுத்திருக்க வேண்டும்.!)

தாம் எதை சொன்னாலும் சிங்களம் நம்பி விடும் என்ற அளவுக்கு பொது அறிவற்ற, இறுமாப்பு, அகங்கார, ஆணவ, பேரினவாத சிந்தனை. Insult to Intelligence. அறிவுக்கு அவமானம். அவ்வளவுதான்.

ஆகவே தான் செய்யும் தப்பையும் தப்பில்லாமல் செய்ய தெரியாத அறிவுகெட்ட முட்டாள் சமன் குமார என்று சொன்னேன். பின்னாளில் அவரை தொலைபேசியில் அழைத்து அவரிடம் சிங்களத்தில் இப்படியே சொன்னேன். அதற்கும் அந்த முட்டாள் இனவாதி அசடுவழிய சிரித்தது, தொலைபேசியில் எனக்கு “தெரிந்தது.”

எனது பேச்சை சமன்குமார பிழை பிழையாக மொழிபெயர்த்தார். ஆனால், அதைவிட விமல் வீரவன்ச நாடெங்கும் பல கூட்டங்களில் இதுபற்றி திரித்து, திரித்து பேசி, என்னை சிங்கள மக்கள் முன்னிலையில் காட்டி இனவாத அரசியல் செய்தார்.

இன்றும், எவருக்கும் மேலும் விளக்கம் வேண்டுமென்றால், அவர்கள் யூடியூப் (YouTube) அலைக்கு போய் எனது அந்த சர்ச்சைக்குரிய பொங்கு தமிழ் உரையை காணொளியாகவே பார்க்கலாம்.
https://www.youtube.com/watch?v=0PPXHBZUs0U

*பின்னுரை:*

மேலே சொன்ன இறுமாப்பு, அகங்கார, ஆணவ, பேரினவாத சிந்தனை ஓட்டத்துக்கு முழு அரசியல் தலைமை தந்தது மஹிந்த ராஜபக்ச.! அராஜக தலைமை தந்தது கோதாபய ராஜபக்ச.! கட்சி தலைமை தந்தது பெசில் ராஜபக்ச.! இவர்களுக்கு மேடை ஒலிபெருக்கி விமல் வீரவன்ச.!

*இன்று:*

நான் இருக்கும் அதே பாராளுமன்றத்தில், மஹிந்த ராஜபக்ச மௌனித்து போய், “அன்று எப்படி இருந்த நான், இன்று இப்படி இருக்கிறேனே.!” என்று ஏங்கி அறிவிக்கும் சோகம் நிரம்பிய கண்களுடன் அமர்ந்திருக்கிறார்.

உலகிலேயே மிக சிறந்த போர்த்துறை பாதுகாப்பு செயலாளர் என்ற புகழப்பட்டு, 69 இலட்சம் வாக்குகளால் பதவியில் அமர்த்தப்பட்ட கோதாபய ராஜபக்ச, சென்று ஒதுங்க இடமில்லாமல், சொந்த நாட்டிலேயே அகதி வாழ்க்கை வாழ்கிறார்.

பெசில் ராஜபக்ச, பாராளுமன்ற ஆசனத்தையே துறந்து, வெளியேறும் நிலைமைக்கு தள்ளி விடப்பட்டுள்ளார்.

எதிரணி முன்வரிசையில் அமர்ந்து இருக்கும் எனக்கு பின்னால், இரண்டு வரிசை பின் தள்ளி, எதிரணியில், அரசில் இருந்து விலகி, ராஜபக்சர்களுடன் முரண்பட்டு, விமல் வீரவன்ச அமர்ந்திருக்கிறார்.

“டே எப்போதும் இதில் வேகம் வேண்டாம்டா, வேகம் உன்னையும் கெடுக்கும், உன்னைச் சார்ந்தவர்களையும் கெடுக்கும்” என்ற மு. வ. வின் “அகல் விளக்கு” நாவல் வரிகள்தான் ஞாபகம் வருகின்றன..!

# "இனப்படுகொலையின் முக்கிய சாட்சி மண்டைதீவு கிணறு"



இனப்படுகொலையின் முக்கிய சாட்சியமாக மண்டைதீவு கிணறு காணப்படுவதாகவும் அவற்றினை ஆய்வுக்குட்படுத்தினால் இனப்படுகொலை சாட்சியங்கள் வெளியாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். வேலணைப் பிரதேச செயளாளர் பிரிவிற்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 29 குடும்பங்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணிகளைச் சுவீகரித்து வெலுசுமண கடற்படை முகாம் அமைப்பதற்கான காணி அளவீடு மற்றும் காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி புதன்கிழமை (12) தினம் மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் இணைந்து எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது இந்த போராட்டத்தில் பலந்துகொண்டு ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேலும் கருத்து தெரிவிக்கையில், "இந்த வெலுசுமண கடற்படை முகாமுக்கு வழங்குவதற்காக பொது மக்களின் காணியை அளக்க முயற்சிக்கப்படுவதனாலேயே இங்கே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்". கடந்த 33 ஆண்டுகளாக அந்தப் பகுதி இராணுவம் வலிந்து கைப்பற்றி விடுவிக்காமல் உள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

"மண்டைதீவு கிழக்கிலுள்ள இப்பிரதேசமானது சிறந்த மண் வளத்துடன் நீர் வளத்தையும் உடைய செழிப்பான விவசாய நிலமாகும். இந்த நிலத்தை 1990 ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து ஆக்கிரமித்துள்ள இராணுவம் இன்று வரை அகலாதுள்ளனர்".

வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு கத்தோலிக்கத் தேவாலயத்திற்கு முன்னாலுள்ள கிணற்றினுள் புதைக்கப்பட்டு இன்றும் எலும்புக் கூடுகளாக உள்ளனர் என்றார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.





இவற்றை ஆய்வு செய்யும்படி வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் நாடாளுமன்றத்தில் கோரிய போதும் இதுவரை எதுவுமே நடைபெறவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"கடற்படை இவ்விடத்தைவிட்டு செல்லுமிடத்து இவ்விடம் ஆய்வுக்குட்படுத்தப்படின் இனப்படுகொல சாட்சியங்கள் இங்கே வெளியாகும் என்பதால் கடற்படை தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளனர். இதற்கு அரசும் தொடர்ந்து ஆதரவளிக்கின்றது".

இவ்விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் கூடுதல் கவனமெடுத்து இங்குள்ள புதைகுழிகளைத் தோண்டவேண்டும் என்பதுடன் தற்போது 18 ஏக்கரென நில அளவைத்திணைக்களம் குறிப்பிட்டாலும் இங்கே 40ற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என்று கூறிய அவர், ஆகவே காலங்காலமாக மக்கள் வாழ்ந்து வந்த இந்த பூர்வீக நிலங்களை மீளவும் உரியவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் கோரினார்.



# தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து படையினர் வெளியேற வேண்டும்: செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்து

- எமது யாழ் செய்தியாளர்



தமிழர்களது நிலங்களை சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய ஆக்கிரமித்துள்ள கடற்படை அங்கிருந்து முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வேலணைப் பிரதேச செயளாளர் பிரிவிற்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 29 தனி நபர்களுக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கு அதிகமான காணிளின் சுவீகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி புதன்கிழாஇ வெலுசுமண கடற்படை முகாமிற்கு முன்னால் எதிர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன்:

"தமிழ் மக்களுடைய காணிகளை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்து கடற்படை முகாம் அமைப்பதற்காக நிரந்தரமாக கையகப்படுத்துவதற்காக இங்கு அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. எம்மைப் பொறுத்தவரை தமிழரது நிலங்களை சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய ஆக்கிரமித்துள்ள கடற்படை முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். இந்த மக்களுடைய காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்".

தீவகப் பகுதியை படையினர் ஆக்கிரமித்த போது குறிப்பாக கோட்டபாய பொறுப்பிலிருந்த காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டும் ஆங்காங்கே புதைக்கப்பட்டுள்ளனர் என்பது உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்தவர்களின் சாட்சி என்றும் அவர் கூறினார்.

"படையினர் இங்கிருந்து வெளியேறுகின்ற போதே புதைகுழிகளைத் தோண்டி உடலங்களை எடுத்து காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை மூலம் கண்டறிய முடியும். இங்கு அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றம் இடம்பெற்று விட்டது என்று அரசாங்கம் உலகத்திற்குச் சொல்லிக் கொண்டு மறுபுறத்திலே காணி அபகரிப்பு நடவடிக்கைளை தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர்".

இலங்கை அரசாங்கத்திடமிருந்து நீதி கிடைக்குமென நம்பிக்கை துளியளவேனும் இல்லாமல் கடந்த 14 ஆண்டுகளாக மக்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி. வருகின்றனர். அதை நிரூபிக்கின்ற வகையிலே தேசிய பாதுகாபாபிற்குரிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் "பச்சை இனவாதி சரத் வீரசேகராவின்" கருத்தும உள்நாட்டுக்குள் ஒருபொழுதும் நீதி கிடைக்காது என்பதை புலப்படுத்துகின்றது என்றும் செல்வராசா கஜேந்திரன் கூறினார்.

"இன்று மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது இங்கு வந்து போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றால் அரசு தமிழர்களுடைய கருத்துக்களை கணக்கெடுக்கவில்லை என்பதே அர்த்தமாகும். தமிழர்களோடு பேசி சர்வதேசத்தை ஏமாற்றி உதவிகளைப் பெற்று தென்னிலங்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையையே அரசாங்கம் மேற்கொள்கின்றது".

ஆகவே, வட கிழக்கிலே தமிழர் விவகாரத்திலே நீதித்துறை சுயாதீனமற்றதென மீள மீள நிரூபித்த வண்ணமுள்ளது. இந்த போராட்டங்களூடாகவே உரிமைகளை வென்றெடுக்க முடிவதுடன் இம் மண்ணிலே இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். எனவே மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமிர்தலிங்கம் நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுசரிப்பு

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சி தலைவராக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கத்தின் 34வது ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர்களின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கை நாடாளுமன்றத்தின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் 34 வது ஆண்டு நினைவு தினம் விய-ாழன் காலை வலி மேற்கு பிரதேச சபைக்கு முன்பாக உள்ள அமரரது உருவச் சிலையடியில் இடம் பெற்றது.

இதன்போது அமரரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் மற்றும் கட்சி தொண்டர்கள் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# அன்பின் தொனி - 697

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

ஜெபம்

ஜெபிக்க வேண்டியது ஒரு கட்டளை - Praying is a Command

ஜெபத்தில் தரித்திருக்கும் முறைகள் - Posture for Prayer

நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன், நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன், உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. - ஏசாயா 1: 15

எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு, ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு, எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன்கைகளை அவரிடத்திற்கு ஏறெடு. - புலம்பல் 2: 19

சற்று அப்புறம்போய்,முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கு ம்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண் ணினார். - மத்தேயு 26: 39

நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பர லோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். - மாற்கு 11: 25

அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி: நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லி, அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய், முழங்கால்படியிட்டு: பிதாவே, உமக்குச் சித்தமா னால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்மு டைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். - லூக்கா 22: 40-42

இவைகளைச் சொன்னபின்பு, அவன் முழங்காற்படியிட்டு, அவர்களெல்லாரோடுங்கூட ஜெபம்பண்ணினான். - அப்போஸ்தலர் 20: 36

பகிரங்க ஜெபம் - Public Prayer

மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக, நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தா னத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்.
- யாத்திராகமம் 20: 24

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக்கொடுப்பேன். இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும். என் நாமம் இந்த ஆலயத்தில் என்றெ ன்றைக்கும் இருக்கும்படி, நான் இதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தப்படுத்தினேன், என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும். - 2 நாளாகமம் 7: 14-16

நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன், அவர்களுடைய சர்வாங்கதகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும் என்னு டைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.
- ஏசாயா 56: 7

அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்.
- மத்தெய 18: 19-20

அவர்களுடைய ஜெபஆலயங்களில் அவர் உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார். தாம் வளர்ந்த ஊராகிய நாச ரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து, வாசிக்க எழுந்து நின்றார். - லூக்கா 4: 15-16

**தொடரும்...**




## மலேசிய இந்திய சமூகம் கைவசமிருந்த நாடாளுமன்ற-சட்டமன்றத் தொகுதிகளை ஒவ்வொன்றாக இழந்துவருகிறது

மலேசிய மடல்



### அடுத்த 10 ஆண்டுகளில் மலேசிய இந்தியர்கள் உரிமையையும் தன்மானத்தையும் இழக்கநேரிடும்

### சமூக ஆர்வலர் "உங்கள் சகோ." மணிமாறன் வெளிச்சம்

நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஜூலை 09:

மலேசிய இந்திய சமுதாயம், கைவசம் இருந்த நாடாளுமன்ற - சட்டமன்றத் தொகுதிகளை ஒவ்வொன்றாக இழந்து வருகிறது.

மலேசியாவின் இன்றைய அரசியல் போக்கும் இந்திய சமுதாயத்தின் நிலையும் இப்படியேத் தொடர்ந்தால் இன்னும் பத்து ஆண்டுகளில், அடுத்த இரண்டு பொதுத் தேர்தலுக்குப் பின் இந்தியர்கள் தங்களின் உரிமையையும் தன்மானத்தையும் இழக்க நேரிடும் என்று சமூக ஆர்வலர் "உங்கள் சகோ" மணிமாறன் கோடிக்காட்டியுள்ளார்.

இதன் தொடர்பில் முகநூல் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொளிப் பதிவில், 222 இருக்கைகளைக் கொண்டிருக்கும் மலேசிய நாடாளு - மன்றத்தில், இந்திய வாக்காளர்களை பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதி ஒன்றுகூட இல்லை.

இந்த நிலையில், 35 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருக்கும் சபா சிறுபான்மையினர் 25 இடங்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கின்-றனர் அதைப்போல, 26 இலட்ச மக்கள்தொகையினராக இருக்கும் சரவாக் மாநில சிறுபான்மையினருக்கும் மலேசிய நாடாளுமன்றத்தில் 31 இடங்கள் உள்ளன.

இதன்படி பார்த்தால், தீபகற்ப மலேசியாவில் 23 லட்சமாக இருக்கும் இந்தியருக்கு 28 இடங்கள் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இல்லை ஏன் இந்த நிலை நமக்கு ஏற்பட்டது.

1963-இல் போர்னியோ மண்டலத்தைச் சேர்ந்த சபா, சரவாக் மாநிலங்கள் இணைந்து புதிய மலேசியா உருவானபோது, சபா - சரவாக் மாநிலங்களின் அன்றையத் தலைவர்கள், மலேசிய நாடாளுமன்றத்தில் தங்களுக்கான பிரதிநிதித்துவ உரிமையை உறுதியுடன் நிலைநாட்டினர்.

அதேவேளை, மெர்டேக்கா காலக்கட்டத்தில் மூவினங்களும் இணைந்த ஒப்பந்தம் உருவானபோது, நம் தாய்க்கட்சியின் அன்றைய தலைமை கோட்டைவிட்டது என்பதுதான் உண்மை அதன் பிரதிபலிப்பைத்தான் இன்று நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் கடந்த 4 தலைமுறைகளாக தொடர்ந்து பின்னுக்கு தள்ளப்படுகிறோம் என்று மலேசிய இந்திய சமுதாயத்தின் உரிமைகுறித்து மணிமாறன் ஆதங்கப்பட்டிருக்கிறார்.



இப்போதும், மலேசிய இந்தியர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர் ஆனால், அவர்கள் இந்திய சமுதாயத்தின் பிரதிநிதிகளாக இல்லை பல இனக் கட்சிகளின் உறுப்பினர்களாக இருப்பதால், அவர்கள் அந்தந்த கட்சியின் நிலைப்பாட்டைதான் எடுக்கின்றனர். அதனால்தான், இந்திய சமுதாய பிரதிநிதி தான் இல்லை என்றும் என்னையே எல்லாவற்றுக்கும் நம்பி இருக்க வேண்டாம் என்று ஒரு பல்லினக் கட்சியின் எம்பி மேடைக்கு மேடை பேசுகின்றார்.

இந்திய சமுதாயத்தை நேரடியாக பிரதிநிதிக்கும் உறுப்பினர் என ஒருவரும் இல்லாத நிலையில், தலைவர்களும் சொந்த ஆ தா ய ந் தே டி க ளா க இருக்கின்றனர். இந்திய சமுதாயத்தின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் குரல்கொடுக்க எவரும் இல்லாததால், கைவசம் இருக்கின்ற நாடாளுமன்ற தொகுதி ஒவ்வொன்றாக இந்திய சமுதாயத்தை விட்டு செல்வதைக் கண்டு வருகிறோம்.

இந்தியரின் பாரம்பரிய தொகுதியாக இருந்த காப்பார் இன்று கைமாறிவிட்டது அதைப்போல கேமரன் மலை, தெலுக் கெமாங் தொகுகளும் இந்திய சமுதாயத்தைவிட்டு சென்றுவிட்டன. தெலுக் கெமாங் தொகுதிக்கு மாற்றாக வந்த போர்ட்டிக்சன் தொகுதியும் போய்விட்டது. இவற்றைப் போல கோத்தா ராஜா தொகுதியையும் இந்திய சமுதாயம் இழந்துவிட்டது.

ஹிண்ட்ரா∴ப் எழுச்சிக்குப் பின், 2008 பொதுத் தேர்தல் முதல் இந்தியர் வசமிருந்த பாடாங் செராய் தொகுதியும் இப்பொழுது கைநழுவிவிட்டது. அதேக் கெடா மாநிலத்தில் லூனாஸ் சட்டமன்ற தொகுதி இந்திய சமுதாயத்தைவிட்டு சென்றுவிட்டது, நடைபெற இருக்கிற சட்டமன்றத் தேர்தல் மூலம் நெகிரியில் ஜெரம் பாடாங் தொகுதியும் முதலை வாயில் சிக்கிய விலங்கின் நிலைக்கு ஆளாகிவிடும்.

இவ்வளவு உரிமை இழப்புக்கும் சமுதாய பின்னடைவுக்கும் காரணம், சமூக உணர்வு இல்லாத இரைதேடித் தலைவர்கள் பதவியில் இருப்பதுதான். இதிலிருந்து விடுபடவும் தங்களின் எதிர்காலம் மறுமலர்ச்சி பெறவும் இந்திய சமுதாயம் விரும்பினால், இருக்கும் ஒரேவழி, ஒரு நல்ல தலைவரை அடையாளம் காண்பதுதான் என்று "உங்கள்சகோ" புகழ் மணிமாறன், அந்தக் காணொளியில் மேலும் தெரிவித்துள்ளார்.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# இவ்வார ராசிபலன்

**14-07-2023 வெள்ளி தொடக்கம் 20-07-2023 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377






**மேஷம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். கர்ம வினைகள் அகலும். பணவரவு உயரும். பொருளாதாரம் உயரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். மங்களச்செய்தி வரும். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். அரசு வகையில் அனுகூலம் உண்டு. பழைய பகை மாறும். தன வரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதுமுயற்சியினை தள்ளி வைக்கவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் இருக்க வேண்டும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லைத் தருகிறவர்கள் விலகி செல்வர். வயிறு உபாதை வந்து சேரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனஅமைதி நிலவும். பங்குச்சந்தை தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மன தைரியம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**ரிஷபம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். சுப விரயம் ஏற்படும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தில் பலன் உண்டு. சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வமையும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றமான காலம். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். வேலைப் பளு அதிகரிக்கும். பூமியால் லாபம் உண்டு. நன்மைகள் நாடி வரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். சீரான வாழ்வமையும். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதி கூடும். லாபம் திருப்தி தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். வாழ்வு நிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாணவர் திறமை பளிச்சிடும். திறமைகள் அதிகமாகும். பல்வலி வந்து போகும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நடராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D




**மிதுனம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனைகள் அகலும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அன்னிய தேசப் பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**கடகம்:** பொன்னான வாய்ப்புக்கள் கிடைக்கும் வாரம். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். காரிய வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பால் தானம் செய்வதில் பாவங்கள் விலகும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். வாகனத்தால் செலவு உண்டு. பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகளால் ஏமாற்றம் அடைவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் தரும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். ஆபரண தொழில் கவனம் தேவை. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். நட்பு வட்டம் விரிவடையும். அன்னதானம் ஆரோக்கியம் தரும். புதிய சிந்தனை உருவாகும். முன்கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்பு வரும். காரியம் கைகூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**சிம்மம்:** திருப்திகள் பெருகும் வாரம். அரசு வாய்ப்பு தடைப்படும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் கூடும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். புத்தி சாதுர்யம் கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. செயல்பாட்டில் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனக்குழப்பங்கள் தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளி துர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,8,1,5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். அற்புதமான காலமாக அமையும். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பு நிறைந்திருக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். குதூகலம் தாண்டவமாடும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவும் திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன்தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான முன்னேற்றம் உண்டு. பொறுமையைக் கையாள வேண்டும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். தான தர்மங்கள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிடைக்கும். வினோதமான எண்ணம் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளால் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பட்டம் பதவி தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,1,5,7
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**துலாம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். நண்பரால் பணவரவு உண்டு. புதிய வாய்ப்புக்கள் வரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. பணிவான பேச்சுக்கள் தேவை. விவசாயம் பலம் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செய்திகள் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஎல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**விருச்சிகம்:** வெகுமானம் அதிகரிக்கும் வாரம். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் தவிர்ப்பது நல்லது. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மையுண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக் கடன் வசூலாகும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு கிட்டும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத் துறையில் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். இனிப்பான செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசண்டிகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,7,2
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,P (தொடர்ச்சி 30 பக்கம்)

# முன்னணி எழுதிய கடிதத்தின் பின்னணி?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

Tamil National People's Front

No.43, 3rd Cross Street, Jaffna

URGING INDIA'S SUPPORT FOR A FEDERAL CONSTITUTION IN SRI LANKA THAT RECOGNISES AND SAFEGUARDS THE TAMIL NATION.

வடக்கு கிழக்கில் தமிழர்களின் இனப் பிரச்சனை விடயத்திற்கு இந்தியா வைத்த தீர்வில் ஒன்றுதான் 13 ஆம் திருத்தச் சட்ட மூலமாக இலங்கையில் உள்ளது. அது முழுமையாக நடக்கின்றதா இல்லையா என்பது பெரிய கேள்வியாக இருப்பினும் அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கத்திற்கு ஒரு படியாக கருதப்படுகிறது.

இருப்பதில் இருந்து அடுத்தவற்றை கோருவதா அல்லது தமிழர் விடயத்தில் தற்போதை நிலைமைக்கேற்ற தீர்வைக் போருவதா அல்லது தமிழ் மக்களின் இறைமையை மதித்து தாயகம், தேசியம் , சுயநிர்ணயத்தின் அடிப்படையில் தீர்வை கோருவதா என்பதே தமிழ் அரசியல் கட்சிகளிடையே உள்ள தன்மானப் பிரச்சணையாகவுள்ளது.

இதற்கு தாயகத்தில் செயல்படும் எந்த தமிழ்க் கட்சியும் விதிவிலக்கல்ல என்பதே இன்றைய நிலைப்பாடாகவும் உள்ளது. இதேநேரம் இந்தியாவால் கொண்டு வரப்பட்டு சட்டப் புத்தகத்தில் எழுத்தில் உள்ள 13ஐ நிறைவேற்றுங்கள் என ஒரு தரப்புக் கோரும் நேரம் தமிழர் பிரச்சணைக்கு சமஸ்டியே தீர்வாக முடியும் அதனை நிறைவேற்றுங்கள் என இன்னுமோர் தரப்பும்கோர சமஸ்டியே தீர்வாக முடியும் என்ப பாரதப் பிரதமருக்கும் 13ற்கு அப்பால் தீர்வை வழங்குவோம் என சிங்களத் தரப்பும் கூறியதனால் அதனை நிறைவேற்ற அழுத்தங்களை வழங்குங்கள் எனத் தமிழ் அரசும் கோரி தற்போது 3 கடிதங்கள் வரையில் பாரதப் பிரதமர் நரேந்திரமோடிக்கு செல்வது உறுதியாகி விட்டது. இனி சிவில் சமூகம் எனவும் வேறு அமைப்புக்களின் பெயரிலும் கடிதங்கள் செல்கின்றனவோ தெரியாது. மாறுபட்ட கோரிக்கைகளுடன் பல கடிதம் சென்று அவற்றை அனுப்புபவர்களின் அரசியல் நிலைப்பாடு மக்களின் மனநிலை என்பவற்றை கேட்டறியவே இலங்கை ஜனாதிபதியை பாரதப் பிரதமர் சந்திப்பதற்கான கால இடைவெளி போதுமானதா எனபது வேறு விடயம்.

இந்தக் காலத்தில் கடிதங்களை தனித் தனியே எழுதினாலும் கடிதமே எழுதாத தரப்புக்களையும் உள்ளடக்கி பொதுக் கருத்தரங்குகளும் இடம்பெறுகிறது. அதனையும் வரவேற்றாலும் இன்று, இந்தியா இலங்கையை பகைத்து அல்லது முட்டிமோதி ஓர் தீர்வை இலங்கை அரசிடம் இருந்து பெற்று தமிழ் மக்களிற்கு வழங்கும் வல்லமையில் அல்லது தேவையில் உள்ளதா எனபது தொடர்பிலும் ஆராய வேண்டும்.

இலங்கை அரசு பொருளாதாரத்தில் முழுமையாக ஆட்டம்கண்டு வீழும் நிலையில் இலங்கையை தூக்கிநிறுத்த முயலும் கடன் வழங்கும் நாடுகளின் பட்டியலில் முதல் மூன்று நாடுகளிற்குள் இந்தியா இருப்பதனால் இந்தியா கூறுபவற்றை இலங்கை ஏற்கும் என்பது தமிழர்களின் பிரதிநிதிகளின் கணக்காக உள்ளது. இதற்கு எதிர்க் கணக்கும் ஒன்று உள்ளது அதாவது அதுவே அரச தரப்பு பிரதிநிதிகளின் கணக்காகவும் உள்ளது. அதாவது இலங்கைக்கு கடன் வழங்கும் பிரதான 3 நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் பரம எதிரியான சீனாவும் உள்ளதனால் சீனாவின் பக்கம் இலங்கை இழுத்துச் செல்லபடுவதனை கட்டுப்படுத்த வேண்டுமானால் இந்தியா இலங்கைக்கு உதவ வேண்டிய கட்டாயம் உள்ளது அதற்காகவே நாம் கை நீட்டும்போதெல்லாம் இந்தியா எமது கையை நிரப்ப தயாராக இருக்கின்றது என்று கொழும்பு கணக்கு போடுகிறது. அந்த கணக்கை பல தசாபதங்களாக சீனா எனும் பூதத்தைக் காட்டி தனக்கு ஆதரவாகப் பயன்படுத்தியும் கொண்டுள்ளது.

அந்த ஆயுத்த்தை பயன்படுத்தி எங்கெல்லாம் சீனா கால் ஊன்றப் பார்க்கின்றதோ அதனையே இந்தியா தடுக்க முயலுமே அன்றி இலங்கைத் தமிழர் விடயத்திற்காக இந்தியா இரங்கை அரசை பகைக்க மாட்டாது என இலங்கை அரசு திடமாக நம்புகின்றது. இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் 3 தீவுகளில் மின்சார உற்பத்திக்கான திட்டத்தை சீனாவிடம் வழங்க அமைச்சரவையும் அனுமதி வழங்கி ஒப்பந்தமும் மேற்கொண்ட பின்னர் இந்தியா தலையிட்டு மிக இரகசியமாக அதனை தடுத்து நிறுத்தியது. அது இந்தியாவின் பூகோள அரசியல் நலன் சார்ந்தது.

இவற்றின் அடிப்படையில் தமிழர் தீர்வில் இந்தியா அக்கறை செலுத்த வேண்டுமானால் ஈழத் தமிழர்களும் இவற்றை ஒத்த காய் நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. அதிலே 13ஐ நடைமுறைப்படுத்துமாறு கோரும் தரப்புக்களோ அல்லது இந்தியாவின் கூற்றிலான தீர்வைத் தாருங்கள் எனக் கேட்பவர்கள் இந்தியாவிற்கு நிரப்பந்தம் அல்லது கட்டாய தேவை உள்ள விடயத்தினையும் தமது பட்டியலில் இணைக்கத் தவறுகின்றனர். ஆனால் இணைப்பதற்கு வழியுண்டு.

13ஆம் திருத்தச் சட்டத்தில் உருவான மாகாண சபை ஒன்றும் வடக்கு கிழக்கில் மட்டும் நடைமுறையில் உள்ள விடயம் அல்ல. அது இலங்கை முழுவதும் உள்ள விடயம். இதனால் இலங்கையின் இன்னுமோர் பகுதியான மலையகத்திற்கும் இது பொருத்தமானது. மலையகத்தில் உள்ள தமிழ் மக்களை இந்தியா இன்றும் தனது மக்களாக கருதுகின்றது. இதனால் இவர்களையும் உள்ளடக்கி அவர்களின் தலைவர்களையும் இணைத்து அங்கே உள்ள தேவைகளையும் சேர்த்து கூற முற்பட்டால் இரு இடங்களின் தமிழர்களிற்கான தீர்வாக அமையக்கூடிய விடயத்தை இந்தியா முன்னுரிமைப் பட்டியலில் இணைக்க கூடும். அது தமிழர்களிற்கு சாதகமாக அமையும். ஏனெனில் 1983களில் ஈழத் தமிழர்களின் விடயங்களில் இந்தியா கரிசணை செலுத்தியபோது ஈழத்தில் 40 லட்சம் தமிழர்கள் இருந்தனர். இன்று 40 வருடம் கழித்து அதே 40 லட்சம் தமிழர்கள்கூட தாயகத்தில் இல்லை என்ற நிலையில் இந்தியாவின் பார்வையை ஈர்க்க வடக்கு கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களிற்கும் சேர்த்து நன்மை பயக்கும் விடயத்தை முன் வைக்கும்போது பழைய நிலையை உருவாக்ககூடும்.

ஏனெனில், வடக்கு கிழக்கிலே ஏனைய கட்சிகள் எல்லாம் துடக்கு கட்சி அவர்கள் இந்தியாவின் சொல்லில் செயல்படுகின்றனர், எதனையும் இந்தியாவிடம் கேட்டு அல்லது இந்தியா ஊடாக செயல்படுத்த முனையும் துரோகிகள் என த.தே.ம.முன்னணி பகிரங்கமாகவே குற்றம் சாட்டும் அரசியலில் ஈடுபட்டு வந்தது. ஆனால் மோடிக்கு கடிதம் எழுத ஏனைய கட்சிகள் ஆயத்தமாவதனை அறிந்து ஓடிச் சென்று முதலில் கடிதம் கையளித்த கட்சி என்ற பெயரை பெற்றுக்கொண்டுள்ளது "சைக்கிள்" முன்னணி உள்ளது.

உள்ளூரில் பிரச்சனை என்றால் முதலில் ஆர்ப்பாட்டம் வைக்கும் முன்னணி கடித அரசியலிலும் ஓடிச் சென்று முதலில் கடிதம் வழங்கும் அளவிற்கு அரசியல் நிலையில் மாற்றம் பெற்றிருக்கின்றது என்றால் இதன் பின்னணியும் ஆராயப்படவேண்டியதாகவே உள்ளது. இது அந்தக் கட்சியின் பகிரங்க கொள்கைக்கு அவமானமாகவே கருதப்படும். ஏனெனில் துரோகிக்கு எப்படி கடிதம் எழுதுவது?

இந்தியா "துரோகி, எதிரி, சதிகாரர்கள், ஏமாற்றுக்காரர்கள்" என்ற நிலையில் இருந்து தூதரகத்திற்குச் சென்று அப்படியானவர்களிற்கு கடிதம் எழுதவேண்டிய அளவிற்கு நிரப்பந்தத்தை காலம் ஏற்படுத்திவிட்டது.

இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள த.தே.ம முன்னணி எழுதிய கடிதத்தின் பின்னணி என்பது- கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்னும் நிலையை உருவாக்கி விட்டது என்பதனை காட்டுவதாகவே உள்ளது. அது மாத்திரமின்றி கிடைக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்னும் நிலையை உருவாக்கியுள்ளதையும் அண்மைக்காலத்தில் அவதானிக்க முடிகிறது. அதாவது, தமிழர் பிரச்சனைகளிற்கான தீர்வு விடயத்தில் கண்டிப்பாக இந்தியாவின் கரிசணையைப் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்த அரசியல் அல்லது இராஜதந்திர உத்திகளையும் பயன்படுத்துவது உகந்ததோ எனவும் சிந்திக்க வேண்டிய அல்லது செயல்படுத்த வேண்டிய கட்டாயமும் உள்ளது.

அந்த அரசியல் உத்தியை, "அரசியலில் நிரந்திர எதிரிகளும் இல்லை, நண்பர்களும் இல்லை" என்கிற பொதுநிலை கோட்பாட்டிற்கு அமைவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியும் முன்னெடுப்பதில் ஆச்சரியமும் இருக்க முடியாது. எதிர்ப்பு அரசியலை மட்டுமே மையப்படுத்தி நீண்ட நெடுங்காலம் அரசியல் செய்ய முடியாது என்பது அரசியலில் பாலபாடம்.

இந்த நேரத்தில் மற்றொரு விடயத்தையும் சிந்திக்க வேண்டியுள்ளது. தமிழர்களிற்கான தீர்வை வழங்க வேண்டும் என்ற சிந்தனை இந்தியாவிடம் இருந்தாலும், அவர்களுக்கும் ஒரு குழப்பம் உள்ளது என்பதை இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதில் முதலாவது தமிழர்களிற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதென்றால், எந்த கட்சி அல்லது குழு முன்வைக்கும் அம்சங்களின் அடிப்படையில் அந்த நிலைப்பாட்டை எடுப்பது என்பதாகும். அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை என்பது ஊரறிந்த ரகசியம். இதில் வடக்கு-கிழக்கை மையப்படுத்தி அரசியலில் ஈடுபடும் எந்த தமிழ் கட்சியும் மலையக மக்களையும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் தீர்வு விடயத்தில் இணைத்துக்கொள்ள தயாராக இல்லை. இந்த அரசியல் தீண்டாமை இன்றளவும் தொடருகிறது. தங்களை சேர்க்காத போது நாம் தனியாக இந்தியாவுடன் பேசிக்கொள்வோம் என்கிற நிலைப்பாடு மலையக கட்சிகளிடமும் உள்ளது. ஆகவே முதலில் வடக்கு கிழக்கு அரசியல் பரப்பில் செயற்படும் கட்சிகளிடையே, தமது சொந்த தேர்தல் அரசியல் சார்ந்த நலனைவிட, மக்கள் நலன் சார்ந்த அரசியலே முக்கியம் என்கிற எண்ணப்பாடு எழ வேண்டும். விடுதலைப் புலிகளின் முன்னெடுப்பில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தளவிற்கு வலுவாக இருந்தது என்பதை மக்கள் அறிவர்.

வடக்கு கிழக்கில் தமிழ் தேசியம் பேசும் கட்சிகளிற்கு அப்பாற்பட்டு, தமிழர் நலன் என்று கூறும் கட்சிகளுக்கும், தேசிய கட்சிகளுக்கு ஓரளவிற்கு வாக்கு வங்கி உள்ளது. தீர்வு விடயத்தில் அவர்களின் கருத்தையும் கேட்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு எழுகிறது.



Yours truly,

GAJENDRAKUMAR G. PONNAMBALAM, M.P.
Leader, Tamil National People's Front (TNPF)
(General Secretary, All Ceylon Tamil Congress)

SELVARAJAH KAJENDREN, M.P.
General Secretary, Tamil National People's Front (TNPF)

இதில் முஸ்லிம் கட்சிகள் மட்டும் இனப்பிரச்சனைக்கான தீர்விற்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது போலவே நடந்துகொள்வதையும் காண முடிகிறது. அதிலும் குறிப்பாக அவர்கள் இந்தியாவுடன் தமது விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதில்லை. தமது மக்களிற்கான தேவைகளை அரபு நாடுகளின் தயவின் மூலம் அவர்கள் வெற்றிகரமாக பெற்றுக்கொண்டு தமது சமூகத்தை முன்னேற்றி வருகின்றனர்.

தற்போது கடிதம் எழுதும் விடயம் தொடர்பில், சைக்கிள், குத்துவிளக்கு, வீடு என்று அனைத்து கட்சிகளும் தனித்தனி நிலைப்பாட்டில் உள்ளன. தமது மக்களிற்கான தீர்வை பெற்றுத்தருவதற்கு ஒரு கடிதம் எழுதுவதில் கூட அவர்களிடையே ஒற்றுமை இல்லை என்று இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் புதுடில்லிக்கும் தெரியப்படுத்தியுள்ளதாக அறியப்படுகிறது. தமிழ் முற்போக்கு கூட்டணி கடிதம் எழுதுவதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

அன்றே சொன்னான் பாரதி:

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1056

## சங்கானை அரசடி வைரவர் ஆலயம் சங்கானை, யாழ்ப்பாணம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதைப் போற்றி வாழ்வது மானிட தர்மமாகும். எனினும் ஒவ்வொருவரும் தமது எண்ணம், வாழ்வுமுறை, சமுதாய அமைப்பு, பூகோள அமைப்பு இவற்றிற்கிணங்க, தமக்கேற்றமுறையில் இறைவழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். தாம்போற்றி வணங்கும் தெய்வீக வடிவங்களுக்கு, அவரவர் பின்பற்றும் வழியில் கோயில்களை அமைத்து, வழிபாடியற்றி வருவது பண்டுதொட்டுக் காணப்டுகின்றது. இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் கோயிலிலுள்ள திருவுருவங்கள்வாயிலாக திருவருளை இலகுவில் பெறமுடியும் என்ற நம்பிக்கை காலங்காலமாக மக்கள் மனதில் வேரூன்றியுள்ளதையே, சூலவழிபாடு செய்த மக்கள் வைரவர் கோயில் எழுப்பக் காரணமாக இருந்திருக்கலாம்.

பொதுவாக, வைரவர் வழிபாடு சோழர் ஆட்சியிலும் பரவிக் காணப்பட்டுள்ளது. வைரவர் காவல் தெய்வமாகப் போற்றப்பட்டுள்ளதால், அரசர்களும் வைரவர் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்படுள்ளனர். இலங்கை, இந்தியா, மலேசியா சிங்கப்பூர், கம்போடியா மற்றும் சைவமக்கள் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகளிலும் வைரவர் வழிபாடு இன்றுவரை போற்றப்படுகின்றது. சோழராச்சியம் தென்கிழக்கு நாடுகள் பலவற்றிலும் பரவியிருந்தபோது, தமிழ்மக்கள் வழிபட ஆலயங்கள் பலவற்றை நிறுவியிருந்தமையை வரலாறு வெளிக்காட்டியுள்ளது.

ஆலயங்களின் வரலாற்றோடு அந்தந்த ஆலய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பல தொண்டர்களின் பெயரும் இடம்பெறும். அந்தவகையிலே பொன்னையா அப்பாத்துரை ஐயர் அவர்களது பணியும் குறிப்பிடத்தக்கது. இவர் சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தைப் பெரிதாக்க எண்ணங்கொண்டார். புடிப்படியாக அதனைச் செயற்படுத்தியும் காட்டியுள்ளார். இந்த ஆலய வீதியின் முற்புறத்தில் கலை கலாச்சார விழாக்கள், கூட்டங்கள் மற்றும் பல்வேறு வைபவங்களும் இடம்பெறுவது வழக்கமாகக் காணப்பட்டது. இவரின் பின்னர் பொன்னையா அப்பாத்துரை ஐயர் அவர்கள் தனது மகனான இரத்தினசாமிக்குருக்களும் ஆலயத்தை பெரிதாக்க உதவியுள்ளார்.

இவ்வாலயத்தில், வைரவப்பெருமான் முதற்கடவுளாக எழுந்தருளியிருக்க, எழுந்தருளி விக்கிரகங்களாக நடராசப்பெருமான், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். இவ்வாலயத்திலே வருடாந்த மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும். இக்காலங்களில் பலவிதமான சமூக, புராண நாடகங்கள் இடம்பெறுவது போற்றற்குரியதாக அமைந்துள்ளது. இவ்வேளையில் பிற ஊர்களிலுமிருந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர் வருகை தருவர். அத்தோடு தமிழர்தம் பாரம்பரியக் கருவியான நாதஸ்வரமும், தவிலும்மிகச் சிறப்பாக இடம்பெறும். இவற்றைக்கண்டு களிக்க அயலூரவர்களும் பெருவாரியாக வருகை தருவர். ஈழத்தின் பிரபல வித்வானாக விளங்கிய தவில்மேதை தட்சிணாமூர்த்தி அவர்களும் சங்கானை அரசடி வைரவர் ஆலயத்தில் கச்சேரி நடத்தியுள்ளமை பெரிதும் போற்றப்டுகின்றது. அத்தோடு மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட வலங்கையான் சண்முகசுந்தரம் அவர்களும் தனது தவில் கச்சேரியை சங்கானை அரசடி வைரவர் ஆலயத்திலே நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புல்வேறு சந்தர்ப்பங்களில் சங்கானை அரசடி வைரவர் புரிந்த அற்புதங்கள் பலவாகக் காணப்படுகின்றது. அரசடி வைரவரை முழுமையாக நம்பியவர்கள் கைவிடப்படமாட்டார்கள் என்று இன்றும் நம்புபவர்களாக இவ்வூர் மக்கள் காணப்படுகின்றனர்.

**- வளரும்...**




## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)



**தனுசு:** எதிர்ப்புகளால் சிறப்பு சேரும் வாரம். பயணம் பலன் தரும். சாதனை படைக்கும் காலம். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். மாற்றங்கள் ஏற்படும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவிகள் கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. தொழில் லாபம் கூடும். பொன், பொருள் சேரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. கணவன் மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். விவசாயிகள் பயன் பெறுவர். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கை கூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெருமைகள் சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் பணம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள் V,J



**மகரம்:** பாராட்டுக்கள் அதிகரிக்கும் வாரம். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபம் தவிர்க்கவும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். புகழும், பொருளும் பெருகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. விபரீத எண்ணம் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனநிறைவு உண்டாகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். அற்புதமான காலம். விளையாட்டுத் துறையில் லாபம் கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. செல்வாக்கு பெருகும். வாழ்வில் வசந்தம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K



**கும்பம்:** மங்களகரமான வாரம். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். ஏற்றமான தருணம் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். மனம் மகிழும். உறவுகளால் மதிப்பு உயரும். உத்தியோக உயர்வு தரும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். குடும்ப உறவு பலப்படும். புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். கண் நோய் வந்து போகும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். அடுத்த வீட்டாரின் ஆதரவு பெருகும். பிரச்சனைகள் தீரும். சுபச்செய்தி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K



**மீனம்:** பொன், பொருள் சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கை உண்டு. கணவன் அன்பு அதிகரிக்கும். முன்கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். பதவி உயர்வு தடைப்படும். பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். வெற்றியை எட்டும் காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும். தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன யோகமுண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தர்மசிந்தனை மேலோங்கும். விருந்தினர் வருகை உண்டு. மெத்தனப்போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND

## *If you are looking for a low-cost, hassle-free mortgage program, choose us!*




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
905-783-1895

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
உதயம் 1423 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 14, 2023

# தான் கல்வி கற்ற மாநகராட்சிப் பாடசாலைக்கு ரூ.20 லட்சம் நிதி வழங்கிய பட்டிமன்றப் பேச்சாளர் சொலமன் பாப்பையா



மதுரையில் தான் படித்த மாநகராட்சி பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு பட்டிமன்ற நடுவரும், , பேராசிரியருமான சொலமன் பாப்பையா ரூ.20 லட்சம் நிதி வழங்கினார்.

மதுரை மாநகராட்சி பாடசாலைளுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் போன்ற கட்டமைப்புகள் தன்னார்வர்கள், கார்ப்பரேட் நிறுவனங்கள் உதவியுடன் மேம்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில், மதுரை மாநகராட்சி வெள்ளி வீதியார் பெண்கள் மேல்நிலைப் பாடசாலையில் கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு நமக்கு நாமே திட்டத்தில் ரூ.20 லட்சம் காசோலையை பேராசிரியர் சொலமன் பாப்பையா மாநகராட்சி ஆணையாளர் பிரவீன்குமாரிடம் (ஜூலை 13) வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கல்வி அலுவலர் நாகேந்திரன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

இதுகுறித்து சொலமன் பாப்பையா கூறுகையில், “தற்போது வெள்ளி வீதியார் மாநகராட்சிப் பாடசாலை பெண்கள் மேல்நிலைப் பாடசாலையாக உள்ளது. நான் படித்தபோது இரு பாலர் நகராட்சி நடுநிலைப் பாடசாலையாகவே இருந்தது. நான்காவது வகுப்பு வரை அதே பாடசாலையில் தான் படித்தேன். அந்தப் பாடசாலையும் அங்கு பணிபுரிந்த ஆசிரியர்களும் கற்றுக்கொடுத்த கல்விதான் இன்று அடைந்த உயரத்திற்கு காரணம். அந்த நன்றியை தெரிவிக்கவே நான் படித்த பாடசாலைக்கு ஒரு சிறு உதவி செய்துள்ளேன்.” என்றார்.

# Scarborough-Guildwood Provincial By-Election will be on July 27th. Liberal Candidate Andrea Hazell seeks support of the people.

# ஸ்காபுறோ – கில்வூட் மாகாண தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்களிப்பு எதிர்வரும் 27ம் திகதி நடைபெறுகின்றது



ஸ்காபுறோ- கில்வூட் மாகாண தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்களிப்பு எதிர்வரும் 27ம் திகதி நடைபெறுகின்றது. இந்தத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடும் அன்ரியா ஹெசல் அவர்கள் தனக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதாகவும் நீண்ட காலமாக மத்திய மற்றும் மாகாண தொகுதிகள் இரண்டு லிபரல் கட்சியின் வேட்பாளர்களே வெற்றியீட்டும் வகையில் இந்த இடைத்தேர்தலிலும் அன்ரியா ஹெசல் அவர்களே வெற்றிபெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.





# இலங்கைக்கான கனடிய மற்றும் பிரன்சுத் தூதுவர்களை சந்தித்து உரையாடிய இலங்கை ‘வீரகேசரி’ பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன்

இலங்கை வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சிறப்பு வைபவம் ஒன்றில் இலங்கைக்கான கனடிய மற்றும் பிரன்சுத் தூதுவர்களை சந்தித்து உரையாடினார். மேற்படி சந்திப்பின்போது “வீரகேசரி“ பத்திரிகை தங்கள் நாடுகள் பற்றிய மற்றும் இலங்கை மக்களுக்காக ஆற்றும் பணிகள் தொடர்பான செய்திகளை தொடர்ச்சியாக பிரசுரம் செய்துவருவதற்கு இரண்டு தூதுவர்களும் ஸ்ரீகஜன் அவர்களிடம் நன்றி தெரிவித்தார்கள்.

# போராடும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களை லயன் வீடுகளிலிருந்து வெளியேற்ற முதலாளிகள் முயற்சி



இரண்டு நூற்றாண்டுகளாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உழைத்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கான நிதியை வழங்காமல் காலம் தாழ்த்தி வரும் தோட்ட நிர்வாகம், தமது கோரிக்கைகளுக்காக போராடும் தொழிலாளர்களை லயன் அறைகளில் இருந்து வெளியேற்றும் முயற்சி ஒன்று அம்பலமாகியுள்ளது.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 16 வருடங்களாக ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியை செலுத்தாத முதலாளிகள், 39 தொழிலாளர் குடும்பங்களுக்கு அவர்கள் வசிக்கும் லயன் வீடுகளை விட்டு வெளியேறுமாறு கடிதம் அனுப்பியுள்ளதாக, ரம்பொடை தோட்டம், ஆர்.பி பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ரம்பொட, ஆர்.பி. பிரிவில் ஏழு லயன் குடியிருப்புகளில் தோட்டத் தொழிலாளர்களின் 150 குடும்பங்கள் வசிக்கின்றன, அந்த 150 குடும்பங்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் தோட்டத்தில் தொழிலாளர்களாக பணியாற்றுகின்றனர்.

2023 மே 16 ஆம் திகதி முதல் குறித்த 48 தொழிலாளர்களும் முன்னறிவிப்பின்றி வேலைக்குச் செல்லாமையால், தோட்ட நிர்வாகத்தால் வீடுகளை ஒப்படைக்குமாறு 39 குடும்பங்களுக்கும் கூறப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தவேண்டிய நிலுவையையும் மாதாந்தக் கொடுப்பனவையும் முறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளிநாட்டு தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவின் குழுவின் தலைவர் ஹெக்டர் அப்புஹாமி பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

2007ஆம் ஆண்டு முதல் ரம்பொடை, ஆர்.பி பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் தங்களுக்கு வழங்க வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியை வழங்கக் கோரி பலத்தடவைகள் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அவ்வாறான ஒரு போராட்ட வடிவமாகவே, மே 16ஆம் திகதி முதல் தோட்ட மக்கள் பணிக்குச் செல்லாமல் பகி‘கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அன்றைய தினம் முதல் இன்று (ஜூலை 12) வரை பணிக்கு சமூகமளிக்காத தொழிலாளர்கள் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், ஜூலை 5ஆம் திகதி தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் கடிதம் மூலம் விடுத்த அறிவிப்பில், 7 நாட்களுக்குள் பணிக்கு சமூகமளிக்காவிட்டால் அவர்கள் சேவையை விட்டு வெளியேறியதாகக் கருதப்படுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிதாக பணியில் சேரும் தொழிலாளர்களுக்கு தங்குமிடம் வழங்க வேண்டியது அவசியம் என்பதால், பணியில் இருந்து வெளியேறிய தொழிலாளர்கள் பயன்படுத்திய லயன் அறையை 15 நாட்களுக்குள் மீள ஒப்படைக்க வேண்டும் எனவும், இல்லை என்றால் சட்ட நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் (CWC) செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகத்தின், உதவி தொழில் ஆணையாளர் ஆகியோருக்கும் தோட்ட நிர்வாகம் குறித்த கடிதத்தின் பிரதிகளை அனுப்பி வைத்துள்ளது.

அந்த லயன் அறைகளிலேயே தாங்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்து வருவதாக தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

1971 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தோட்ட வீடுகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய, தோட்ட நிர்வாகமானது, நீதிமன்றத்தின் அனுமதியின்றி தோட்டத் தொழிலாளி ஒருவரை தோட்ட வீட்டில் இருந்து வெளியேற்ற முடியாது.

தகவல் முரண்பாடுகள் பெருந்தோட்டத்துறை நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதிய கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியுள்ளதாகவும், பாரியளவான நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தவேண்டி உள்ளதாகவும் வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மைய அமர்வில் தெரியவந்துள்ளது.

குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையில் ஜூன் 22ஆம் திகதி கூடியபோது, பெருந்தோட்டத்துறையில் சில நிறுவனங்களினால் செலுத்தப்பட்ட சுமார் 700 மில்லியன் ரூபாய் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் முரண்பட்ட நிலைமை காரணமாக கணக்கில் பதிவுசெய்ய முடியாமல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.